வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வீர மலர் ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 05 | 19.11.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 343 | பக்கங்கள் : 16



**08** ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவது குறித்து கூற மறுக்கும் ரணில்!



**09** ரணிலின் 2024 பட்ஜெட் யோசனை ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனம்!



**10** மீண்டும் கமரொன் மீண்டும் 'குரல்' ஒலிக்குமா?



**11** வரவு – செலவு திட்டம் – 2024: ரணில்கூறுவது போல நாட்டை மீட்டெடுக்குமா?

# நாட்டை வங்குரோத்தாக்கியது நாங்களல்லர் நல்லாட்சி அரசே!

## மகிந்த குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 19

நாட்டை வங்குரோத்து நிலைக்குள்ளாக்கியது நாம் அல்லர். அன்றைய நல்லாட்சி அரசுக்கு பங்காற்றிய தற்போதைய ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்களே காரணம் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான சிங்கள வார ஏடு ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நான் தோல்வியடைந்த போது, நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 7 வீதமாக இருந்தது.

ஆனால், நல்லாட்சி அரசின் பின்னர் 2020 ஆம் ஆண்டு மீண்டும் நாட்டைக் கைப்பற்றிய போது பொருளாதார வளர்ச்சி வீதத்தை 2 வீதமாகக் குறைத்தது ராஜபக்ஷக்களா என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்களிடம் கேள்வி எழுப்புவேன்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை

15

## றொஷானை நீக்கி எஸ்.பிக்கு விளையாட்டுத்துறை அமைச்சு

கொழும்பு, நவ. 19

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி தோல்வி அடைந்ததையடுத்து எழுந்த சர்ச்சை காரண மாக விளையாட்டுத்துறை அமைச்சரான றொஷான் ரணசிங்கவை நீக்கி அந்தப் பதவிக்கு எஸ்.பி.திசாநாயக்க நியமிக்கப்படவுள்ளதாக சிங்கள வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

15

## வடக்கில் இன்று கனமழை

யாழ்ப்பாணம், நவ. 19

அதிக ஈரப்பதன் நிறைந்த காற்றின் உள்வருகை காரணமாக இன்று அதிகாலை 2.00 மணிமுதல் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கனமானது முதல் மிகக் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப் புள்ளது என யாழ்.பல்கலைக்கழக

15

## காங்கேசன் – நாகை இடையே 'சிவகங்கை' கப்பல் சேவை ஜனவரி முதல் வாரம் ஆரம்பம்

சென்னை, நவ. 19

காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையில் சிவகங்கை பயணிகள் கப்பல் சேவை ஜனவரி முதல் வாரத்தில் காலநிலையைப் பொறுத்து ஆரம்பிக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட இந்த கப்பல் சேவைகள் தனியார் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சோ.நிரஞ்சன் நந்தகோபன் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

ஜனவரி முதல் கப்பல் சேவையை நடத்துவதற்கான பூர்வாங்க அனுமதிகள் இரண்டு அரசாங்கங்களிடம் இருந்தும் கிடைத்து விட்டன. இதற்காக இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட "சிவகங்கை" என்ற கப்பல் ஈடுபடுத்தப்படவுள்ளது.

இக்கப்பல் டிசெம்பர் நடுப்பகுதியில் நாகபட்டினத்திற்கு கொண்டுவரப்படவுள்ளது. இக்கப்பலில் 150 பயணிகள்

15



வரலாற்று பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் கந்த சஷ்டி விரத இறுதிநாளான நேற்று இடம்பெற்ற சூரன் போர் உற்சவம்
(படம் : ஐ.சிவசாந்தன்)



## சட்டவிரோத மீன்பிடி; 22 இந்தியர்கள் கைது

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ்ப்பாணம் - பருத்தித்துறையை அண்மித்த கடற்பகுதியில் நேற்று சட்டவிரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட 22 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, குறித்த மீனவர்களுக்கு சொந்தமான 2 படகுகளும் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக கடற்படை பேச்சாளர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டுள்ள 22 இந்திய மீனவர்களும் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்த நிலையில், அவர்களை

15

## உருக்குலைந்த நிலையில் பொன்னாலையில் சடலம்

யாழ்ப்பாணம், நவ. 19

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னாலைச் சந்தியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் உள்ள புதர் ஒன்றுக்குள் நேற்று உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

15





## செந்திலின் இடத்துக்கு நஸீர்?

கொழும்பு, நவ. 19

கிழக்கு மாகாண ஆளுநராக பதவி வகித்து வரும் செந்தில் தொண்டமானை நீக்கி அண்மையில் பதவி இழந்த முன்னாள் அமைச்சர் நசீர் அகமட்டுக்கு அப்பதவியை வழங்கவுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை

15

## இலங்கையின் நலனில் இந்தியா அக்கறையுடன் செயல்படுகிறது!

### ரணிலிடம் கூறினார் அந்நாட்டு அமைச்சர்

கொழும்பு, நவ. 19

அண்டைய நாடுகளுக்கு முன்னுரிமை என்ற இந்தியாவின் கொள்கையின் பிரகாரம், இலங்கையில் முதலீடுகளை அதிகரிப்பதற்கான செயல்பாடுகளில் இந்தியா ஈடுபட்டு வருவதாக இந்தியாவின் புவி அறிவியல் அமைச்சர் கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் அமைச்சர் கிரண் ரிஜிஜூக்கும் இடையிலான

15

## கோப் குழு தலைவரின் பதவி பறிக்கப்படலாம்!

### எதிர்க்கட்சிகள் இணைந்து முஸ்தீபு

கொழும்பு, நவ. 19

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப்) தலைவர் ரஞ்சித் பண்டாரவின் பதவியை பறிப்பதற்கான முயற்சிகளில் எதிர்க்கட்சி ஈடுபட்டுள்ளது.

"கண்டி கிரிக்கெட் கம்பஸ் திட்டத்தின் ஆலோசகராக பணியாற்றியுள்ள கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டார, கிரிக்கெட் நிறுவனம் கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டு

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

ஈழநாடு











நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற சூரன் போர் உற்சவத்தின் போது.... (படங்கள் : ஐ.சிவசாந்தன்)

# இலங்கை கிரிக்கெட்டை தடை செய்யுமாறு கோரி ஷம்மி அனுப்பிய கடிதத்தை பகிரங்கப்படுத்திய சஜித்!

கொழும்பு, நவ. 19

இலங்கை கிரிக்கெட்டுக்கு தடை விதிக்குமாறு சர்வதேச கிரிக்கெட் பேரவையிடம் ஷம்மி சில்வா கோரிக்கை விடுத்தார் எனக் கூறப்படும் கடிதம் ஒன்றை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நேறறு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இந்தக் கடிதத்தில் ஆறு குற்றச்சாட்டுகள் உள்ளடங்குவதாகவும், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் இலங்கை அரசாங்கம் தலையிடுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்யானவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

# பாடசாலை,வர்த்தக நிலையங்களுக்குள் கடும் மழையினால் புகுந்தது வெள்ள நீர்!

## புதுக்குடியிருப்பில் கற்றல் செயல்பாடுகள் முடக்கம்!!









முல்லைத்தீவு, நவ. 19

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியில் தொடர்ச்சியாக பெய்த கன மழையால் பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலையால் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. இதனால் புதுக்குடியிருப்பு நகரில் பாரிய அளவில் நீர் தேங்கி பெரும அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளும், வர்த்தகச் செயற்பாஅடுகளும, அப்பகுதி மக்களின் அன்றாட நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன.

நேற்று அதிகாலை பெய்த கன மழையால் பல வர்த்தக நிலையங்களுக்குள் நீர் புகுந்துள்ளது. அத்தோடு புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலை மற்றும்

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு செல்லும் வீதி, அத்தோடு நகர்ப்பகுதியில் உள்ள பல வீடுகளுக்குள்ளும் வெள்ள நீர் புகுந்தமையால் மக்கள் பாதிக்கப்பட்டனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச மக்கள் கடந்த சில வருடங்களாக மழைநீர் வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதற்கு சிறந்த நீர் வடிகாலமைப்பு பொறிமுறை ஒன்று புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு இல்லாமையும், அரச திணைக்களங்களின் அசண்டையீனமுமே காரணம் எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(அ)

# யாழில் 'பிக் மீ' சாரதி மீது தாக்குதல்!

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ், திருநெல்வேலி பகுதியில் பிக்மீ சாரதி ஒருவர் மீது தரிப்பிட முச்சக்கரவண்டி சாரதிகள் ஒன்றுகூடி தாக்குதல் நடத்தியுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்றபோது பொலிஸாரும் தனக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் நடந்து கொண்டதாக பாதிக்கப்பட்ட பிக்மீ சாரதி தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக யாழில் பிக்மீ மற்றும் ஊபர் சேவையைப் பயன்படுத்திவரும் முச்சக்கரவண்டி சாரதிகள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு வரும் சந்தர்ப்பங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கோழி இறைச்சி, முட்டை விலைகள் மீண்டும் வீழ்ச்சி!

கொழும்பு, நவ. 19

பண்டிகைக் காலத்தில் கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலை மேலும் குறையும் என கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்துள்ளார்.

வற் வரி அதிகரிப்பினால் இறக்குமதி செய்யப்படும் கால்நடைத் தீவனத்தின் விலை அதிகரித்தால் இந்நிலை மாறலாம் என அஜித் குணசேகர கூறினார்.

சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் தொடர்ச்சியாக தமது உற்பத்திகளை சந்தைக்கு அனுப்புவதால் முட்டையொன்று 35 - 40 ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்பனையாகும் சாத்தியம் காணப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# தூக்கில் தொங்குவதாக தனது மனைவிக்கு பாசாங்கு செய்தவர் மரக்கிளை முறிந்து பலி!

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ்ப்பாணம் - நெடுந்தீவில் தூக்கில் தொங்குவது போன்று மனைவிக்குப் பாசாங்கு செய்தவர் மரக்கிளை முறிந்தமையால் உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரு பிள்ளைகளின் தந்தையான 26 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நெடுந்தீவுப் பகுதியில் வசிக்கும் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மனைவியுடன் பேசியவாறு தான் தற்கொலை செய்வேன் என வேப்பமரத்தில் தூக்கிட்டு பாசாங்கு செய்துள்ளார்.

இதன்போது அந்தக் குடும்பஸ்தர் தூக்கை மாட்டியவாறு மரத்தில் இருந்து கீழே இறங்க முற்பட்டவேளை வேப்ப மரக்கிளை முறிந்து விழுந்த நிலையில் தூக்கில் அகப்பட்டுள்ளார்.

இந்நிலையில், குடும்பஸ்தர் அந்த இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். அவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது.(அ)

# கிரிக்கெட் மட்டையால் கணவனை தாக்கிக் கொன்ற மனைவி கைது!

கொழும்பு, நவ. 19

குடும்பத் தகராறு காரணமாக மனைவி தாக்கியதில் கணவர் உயிரிழந்த சம்பவம் ஒன்று திஸ்ஸமஹாராம, கவன்திஸ்ஸபுர பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

குறித்த பெண் கிரிக்கெட் மட்டையால் அவரது கணவரின் தலையில் தாக்கியதில், பலத்த காயமடைந்த நபர் தெபரவெவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர் 47 வயதுடையவரென தெரிவிக்கப்படுகிறது.

கொலையுடன் தொடர்புடைய 42 வயதுடைய உயிரிழந்தவரின் மனைவி திஸ்ஸமஹாராம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# ஹாட்லி மைந்தர்களின் 24 ஆம் ஆண்டு நினைவு





வடமராட்சி, நவ. 19

பருத்தித்துறை ஹாட்லி யின் மைந்தர்களது 24 ஆம் ஆண்டு நினைவு நாள் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில் அவர்களது குடும்பத்தவர் மற்றும் நண்பர்களால் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

கல்வி செயற்பாட்டின் நிமித்தம் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரை பகுதியில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி, கடல் வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்த யாழ். ஹாட்லி கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்கள் நான்கு பேரின் 24ஆவது ஆண்டு மற்றும் பேராதனை பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீட மாணவனாக கல்வி கற்றுவந்த வேளை ரயில் விபத் தில் சிக்கி உயிரிழந்த மாணவ னது 19 ஆவது ஆண்டு நினை வேந்தல் நிகழ்வு நேற்று முன் தினம் வெள் ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 17/11/1999 அன்று கடலோடு கடலாக சங்க மித்திருந்த, பூரணமூர்த்தி - கந்தர்வன், சிவநாதன் - இரவிசங்கர், சுந்தரலிங்கம் - சிவோத்தமன் மற்றும் பாலகிருஸ்ணன் - பிரதீபன் ஆகியோருடன் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட மாணவனாக இருந்த பொழுதில் 17/05/2004 அன்று இடம்பெற்ற ரயில் விபத்தில் சிக்கி சாவடைந்திருந்த மரியரட்ணம் குணரட்ணம் ஆகியோரின் குடும்பத்தினர், உறவினர் கள் மற்றும் நண்பர்கள் ஒன்றிணைந்து இந்நினை வேந்தல் நிகழ்வை நடத்தி னர்.

குறித்த மாணவர்களது திருவுருவப்படம் வைக்கப்பட்டு அவர்களுக்கு விருப்பமான உணவுவகைகள் படையலிட்டு மேற்கொள்ளப்பட்ட நினை வேந்தல் நிகழ்வில் ஹாட்லி கல்லூரி அதிபர் தம்பையா கலைச் செல்வன், மாணவர்களது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மலர்தூவி, சுடரேற்றி நினைவு வணக்கம் செலுத்தியிருந்தார்கள். இறுதியில் படையல் பொருட்கள் மற்றும் மாலை, பூக்கள் என்பன மாணவர்களின் ஆன்மா இரண்டறக் கலந்திருக்கும் இன்பர்சிட்டி கடலில் கலக்கப்பட்டது. (அ-2)

# வெளிநாட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பணம்!

கொழும்பு, நவ. 19

வெளிநாட்டு வைத்திய சாலையில் சிகிச்சை பெறு வதற்காக இரண்டு பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தினால் ஒரு கோடியே 91 இலட் சத்துக்கும் அதிக பணம் வழங்கப் பட்டுள்ளது.

முன்னாள் இரத்தினபுரி மாவட்ட சபை உறுப்பினர் ரஞ்சித் சொய்சா மற்றும் தற் போதைய பாராளுமன் றத் தில் பொதுஜன பெர முனவினால் நியமிக்கப் பட்ட ஜயந்த வீரசிங்க ஆகி யோருக்கு இந்த பணம் வழங்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பி னர் ரஞ்சித் சொய்சா கால மான நிலையில் அவருக் காக செலுத் தப்பட்ட தொகை ஒரு கோடியே 21 இலட்சத்து 60,000 ரூபாய் ஆகும்.

கடந்த ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டும் இரண்டு தவணையாக இந்தத் தொகை செலுத்தப்பட்டது.

ஜயந்த வீரசிங்கவுக்கு வழங்கப்பட்ட தொகை 69 இலட்சத்து 55,000ரூபாய் ஆகும்.

இதற்கிடையில், கடந்த ஆண்டு, இருதய அறுவை சிகிச்சை, புற்றுநோய், மூளை தொடர்பான நோய்கள், முழங் கால் மற்றும் இடுப்பு தொடர்பான நோய்கள், சிறுநீரக நோய்கள் மற்றும் இதர சிகிச்சைகளுக்கு 5,101 நோயாளிகள் வைத் திய உதவி கோரிய நிலை யில் 2750 நோயாளிகளுக்கு மட்டுமே பணம் வழங்கப் பட்டதாக தேசிய தணிக்கை அறிக்கை வெளிப்படுத்தி யுள்ளது.

விண்ணப்பங்களின் எண் ணிக்கை மற்றும் பய னாளிக ளின் எண்ணிக்கை யுடன் ஒப் பிடுகையில், இது 54 வீதம் என்றும் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

இது தொடர்பாக தேசிய தணிக்கை அலுவலகம் நடத் திய விசாரணைக்கு நிர்வா கம் எந்த பதிலும் அளிக்க வில்லை என்பது குறிப்பி டத்தக்கது. (அ)

# ஹாட்லியில் குருதிக்கொடை முகாம்

வடமராட்சி, நவ.19

பருத்தித்துறை ஹாட்லியின் மைந்தர் கள் நினைவு குருதிக் கொடை முகாம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை கல் லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்வி செயற்பாட்டின் நிமித்தம் வடம ராட்சி இன்பர்சிட்டி கடற்கரை பகுதியில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி, கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த வேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரி ழந்திருந்த யாழ். ஹாட்லி கல்லூரி மாண வர்கள் நான்கு பேரின் 24 ஆவது ஆண்டு மற்றும் பேராதனை பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீட மாணவனாக கல்வி கற்று வந்த



வேளை ரயில் விபத்தில் சிக்கி உயிரி ழந்த மாணவன் ஆகியோரின் 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட் டுள்ளது.

இதையடுத்து ஹாட்லியின் மைந்தர்கள் நினைவு நிதியத்தின் ஏற்பாட்டில் வருடா வருடம் முன்னெடுக்கப்பட்டு வரும் குரு திக் கொடை முகாம் நேற்று முன் தினம் காலை 09.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை ஹாட்லி கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. (அ-2)

# நாடு திரும்பினார் ஜனாதிபதி

கொழும்பு, நவ. 19

மாலைதீவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க நாடு திரும்பியுள் ளார்.

ஜனாதிபதி நேற்றுக் காலை 9.30 மணியளவில் மாலைதீவில் இருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்த டைந்தார்.

மாலைதீவின் புதிய ஜனா திபதி மொஹமட் முய்சுவின் பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 16 ஆம் திகதி பிற்பகல் நாட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றார்.

மாலைதீவின் புதிய ஜனா திபதியின் பதவியேற்பு விழா தலைநகர் மாலேயில் நடை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# அவசரகால மருந்து கொள்வனவை மட்டுப்படுத்துவதற்கு அரசு தீர்மானம்

கொழும்பு, நவ. 19

அவசரகால கொள்முதலை நிபந்தனைகளுக்கு உட்பட்டு அத்தியாவசிய நிகழ்வுகளுக்கு மட்டும் மருந்துக் கொள்வனவு களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாக சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்

தேசிய மருந்துகள் ஒழுங்கு முறை ஆணையத்தின் நிபுணர் குழுவின் பரிந்துரையின் பேரில் இந்த அறிவுறுத்தல் வளங்கப் பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அதன்படி, பதிவு செய்யப் பட்ட விநியோகஸ்தர்களினால் மாத்திரமே மருந்துகள் கொள்வனவு செய்யப்படும்.

மேலும், குறிப்பிட்ட விநி யோகஸ்தர்கள் சில மருந்து களை வழங்க முன்வருவதில்லை என்றும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

அத்தகைய சந்தர்ப்பத்தில், பொருத்தமான மருந்துகள் இந் திய அரசாங்க முகவர் மூலமாக கொள்வனவு செய்யப்படவுள்ள தாக அவர் மேலும் குறிப்பிட் டார். (அ)

# நீச்சல் தடாகத்தில் மூழ்கி 6 வயது சிறுமி உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 19

ஹோட்டல் ஒன்றின் நீச்சல் தடாகத்தில் விழுந்து 6 வயது சிறுமி உயிரிழந்தார் என பதுர லிய பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிவேரிய அம்பரல்வ வடக்கு பகுதியைச் சேர்ந்த தனேஷி ஆருத்யா என்ற சிறு மியே இவ்வாறு உயிரிழந்துள்ள தாக பொலிஸார் தெரிவித்த னர்.

பதுரலிய, இலுக்பொத்த வில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பெற்றோருடன் ஓய்வெடுக்க வந்த வேளையில் நேற்று முன் தினம் நீச்சல் தடாகத்தில் மூழ்கிய நிலையில், களுத்துறை நாகொட போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுரலிய பொலிஸார் மேற்கொண் டுள்ளனர். (அ)

# ரஞ்சித் பண்டாரவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

கொழும்பு, நவ. 19

கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டாரவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேர ணையை கொண்டு வருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மா னித்துள்ளது.

நம்பிக்கையில்லாப் பிரே ரணை எதிர்வரும் வாரத்தில் சபாநாயகரிடம் கையளிக்கப்ப டும் என பாராளுமன்ற உறுப் பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான கலந்து ரையாடல்கள் தற்போது இடம் பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் இடம்பெற்ற, ஸ்ரீலங்கா கிரிக்கெட் அதிகாரி களுக்கும், கோப் குழுவுக்கும் இடையிலான கலந்துரையாட லின் போது, கோப் குழு தலைவரின் முறையற்ற நடவடிக்கையை அடிப்படையாக கொண்டு இந்த நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# மார்கழி இசை விழா டிசெம்பர் இறுதியில்



**யாழ்ப்பாணம், நவ. 19**

**மார்கழி இசை விழாவும் வட மாகாணத்தைச் சேர்ந்த சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களது உற்பத்தி கண்காட்சியும் எதிர் வரும் டிசெம்பர் மாதம் 27 ஆம், 28 ஆம், 29ஆம் திகதிகளில் யாழ்ப்பாண கலாசார மத்தியநிலையத்தில் இடம்பெறவுள்ளதாக யாழ். வணிகர் கழக தலைவர் தெரிவித்தார். யாழ்ப்பாண வணிக கழகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இதனை கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களுடைய கலை கலாசார பண்பாடுகளை பாதுகாக்கும நோக்கத்துடனும் தமிழர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் மார்கழி இசை விழாவும் வட மாகாணத்தைச் சேர்ந்த சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களது உற்பத்தி கண்காட்சியும் வரும் டிசெம்பர் மாதம் 27ஆம், 28ஆம், 29ஆம் திகதிகளில் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலைய உட்புற மண்டபத்திலும் லுமவெளிப்புற திடலிலும் நடைபெறவுள்ளன.

வெளிநாட்டு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இலங்கை ஏற்றுமதி அதிகார சபை மற்றும் ஏற்றுமதி துறை சார்ந்த பல அனுபவம் வாய்ந்த ஏற்றுமதியாளர்கள் எல்லோரையும் இதற்கு அழைத்து இருக்கின்றோம்.

இதற்கஇந்தியாவில் இருந்து சிறிய நடுத்தர உற்பத்தியாளர்களது உற்பத்திகளுக்கு தேவையான இயந்திரங்களை, புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய இயந்திரங்களை காட்சிப்படுத்தவும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.ர

குறித்த நிகழ்வுகளில் மக்கள் பங்குபற்றி பயன்பெற முடியும்.

இந்த நிகழ்வுகளில் யாழ் மாவட்டம் மாத்திரமல்லாது வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கலைஞர்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்கள் பங்குபற்ற முடியும்-என்றார். (அ)



## இந்திய தூதுவர்-அனுரகுமார சந்திப்பு

*கொழும்பு, நவ. 19*

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, இந்திய தூதுவர் கோபால் பாக்லேயை இந்திய தூதரகத்தில் சந்தித்து பொருளாதார நெருக்கடி மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

"இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை மற்றும் எமது நாடு தற்போது எதிர் நோக்கும் பொருளாதார நெருக்கடிகள் குறித்து நீண்ட நேரம் கலந்துரையாட தனக்கு வாய்ப்பு கிடைத்தது" என அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்திய தூதரகத்தின முதல் செயலாளர் எல்டோஸ் மத்யூ, மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய செயற்குழு உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோரும் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (அ)

# விமான நிலையத்தில் இரு பெண்கள் கைது

*கொழும்பு,நவ. 19*

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் எந்தவித சட்ட அனுமதியும் இன்றி சுற்றுலா விசாவின் கீழ் ஓமானுக்கு செல்வதற்காக வந்த நிலையிலேயே இந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்

நேற்று முன்தினம் காலை 09:25 மணிக்கு செல்லவிருந்த விமானத்தில் பயணிப்பதற்கு முயற்சித்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சாவடிக்கு அருகில் செல்லும் பாதுகாப்பு வேலியினூடாக இரண்டு பெண்களும் ஊடுருவ முயற்சித்ததாகவும் தெரியவந்துள்ளது.

(அ)

# புலமைப்பரிசில் மாணவர்களுக்கான கொடுப்பனவை அதிகரிக்க ஏற்பாடு

*கொழும்பு, நவ. 19*

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவை அதிகரிக்குமாறு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புலமைப்பரிசில் பெறுபேறுகள் தொடர்பாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கருத்து தெரிவித்த போதே இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

புலமைப்பரிசில் பெறும் மாணவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் 750 ரூபாவை 1000 ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும கோரினார்.

புலமைப்பரிசில் பெறுவோரின் எண்ணிக்கை 20,000-இல் இருந்து 30,000 ஆக அதிகரிக்கப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இம்முறை கல்வி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டை சேமித்து இதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய கல்வி சீர்திருத்தத்தின் கீழ், மாணவர்களுக்கு அழுத்தங்கள் ஏற்படாத வகையில், புலமைப்பரிசில் பரீட்சையை இலகுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

(அ)

# யாழ். பஸ்களில் கைபேசி திருடி வந்த மூவர் கைது!

*யாழ்ப்பாணம், நவ. 19*

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பஸ்களில் பயணம் செய்வர்களை இலக்கு வைத்து கையடக்க தொலைபேசி திருட்டில் ஈடுபட்டு வந்த மூன்று பேர் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸாரால் அதிரடியாக கைது செய்யப்பட்டனர்.

இதன்போது நான்கு இலட்சம் ரூபாய் பெறுமதியான 8 கையடக்க தொலைபேசிகளும் மீட்கப்பட்டுள்ளன.

பஸ்ஸில் பயணம் செய்பவர்களின் தொலைபேசிகள் திருட்டுப் போவது சம்பந்தமாக தொடர்ச்சியான முறைப்பாடுகள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பட்டு வந்த நிலையில், யாழ்ப்பாண பொலிஸ் குற்றதடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி இந்திக்க தலைமையிலான குழுவினர் மூன்று நபர்களை கைது செய்தனர்.



யாழ். நகரை அண்டிய வண்ணார் பண்ணை, பிரப்பங்குளம் சிவலிங்கபபுளியடியை சேர்ந்த 24,31,33 வயதுடையவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் மேலும் திருட்டுப்போன பல கையடக்க தொலைபேசிகளை மீட்கவுள்ளதாக தெரிவித்தனர்.

(அ-03)

# தேர்தலை இலக்கு வைத்த பட்ஜெட் அல்ல இது!



*கொழும்பு, நவ. 19*

அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்தாலும் ஒரு தலைவருக்கு அடிமையாக இருந்து சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடக்கூடாது என நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், இறுதியில் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும், இல்லையெனில் அக்குழுவினர் அரசாங்கத்தை விட்டு வெளியேறவேண்டும் என்று அமைச்சர் கூறினார்.

நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தேர்தலை இலக்கு வைத்து முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் இது அல்ல என்பதை அனைவரும் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும் எனவும் அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ கூறினார். (அ)

ஈழநாடு
Eelanadu
19.11.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 03

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஒற்றுமை யாருக்காக?

தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகள் மத்தியில் ஒற்றுமை அவசியம். யுத்தம் முடிவுற்ற காலத்திலிருந்து இவ்வாறான அபிப்பிராயங்கள் பலராலும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இந்த விடயத்தில் முன்னேற்றங்கள் ஏற்படவில்லை. 2009இல் யுத்தம் முடிவுற்றபோது, தமிழ் மக்களின் முன்னால், தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே இருந்தது. ஆனால் இன்றோ எண்ணுமளவிற்கு கட்சிகள் அதிகரித்துவிட்டன. இந்த நிலையில் முன்னரைவிடவும் இப்போது ஒற்றுமைப்பட வேண்டியதன் தேவை அதிகரித்திருக்கின்றது.

தமிழ் கட்சிகள் ஒற்றுமைப்படவேண்டுமென்று கூறுகின்ற போது - முதலில் எழும் கேள்விகள் - ஏன் ஒற்றுமைப்பட வேண்டும்? யாருக்காக ஒற்றுமைப்பட வேண்டும்? 2009இற்கு பின்னர் - ஒரு விடயத்தை முன்னெடுக்கும்போது மேல்வரும் பிரதான சவாலோ வித்தியாசமானது. அதாவது, விடயத்தின் முக்கியத்துவத்தை - அதன் தேவையை புரிந்து கொள்வதற்குப் பதிலாக - யாரோ இதற்கு பின்னால் இருக்கின்றார்கள் என்றவாறு புரிந்துகொள்வதும், தாங்கள் புரிந்து கொண்டதே சரியென்று மல்லுக்கட்டுக்கின்ற போக்கொன்று அதிகரித்திருக்கின்றது. அனைத்தையும் சதிக் கோட்பாடுகளின் வழியாக விளங்கிக்கொள்ள முற்படும் போக்கொன்று, பலரை ஆட்கொண்டிருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில்தான், தமிழ் கட்சிகள் மத்தியில் ஒற்றுமையின் தேவை தொடர்பில் பேசுகின்ற போது, இந்த ஒற்றுமை கோரிக்கை யாருக்கானது - என்னும் கேள்வி எழலாம். தமிழ் கட்சிகள் சில விடயங்களில் தேர்தல் அரசியலுக்கு அப்பால் - தமிழ் மக்களின் நலன்களில் ஓரணியாக நிற்கவேண்டும் - என்பதைத்தான் ஒற்றுமை என்னும் சொல் வரையறுக்கின்றது. அடுத்த கேள்வி - இது யாருக்கான ஒற்றுமை? பதில் சுலபமானது - இது தமிழ் மக்களுக்கான ஒற்றுமை.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் ஓரணியாக நிற்கின்றபோது, தமிழ் மக்களின் பேரம் பேசும் அரசியல் பலம் பெறும். இந்த அடிப்படையில்தான், பலமான இராணுவ கட்டமைப்புடன் இருந்த விடுதலைப் புலிகள் அமைப்பு, தமிழ் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தி, அதன் தேர்தல் வெற்றிக்காக உழைத்தது. ஏனெனில் அன்றைய சூழ்நிலையை கருத்தில் கொண்டே, விடுதலைப் புலிகளின் தலைமை சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பை தத்தெடுத்துக் கொண்டது - அத்துடன், தங்களின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப அதனை வழிநடத்தியது.

ஒரு பலமான இராணுவ அமைப்பு எதற்காக தங்களால் தடை செய்யப்பட்ட இயக்கங்களையும் உள்ளடக்கியவாறு, ஒரு ஜனநாயக கட்சிகளின் கூட்டு தொடர்பில் சிந்தித்தது? ஏனென்றால், பேச்சுவார்த்தைக்கு செல்லுகின்றபோது, தமிழ் தேசிய அரசியல் பல அணிகளால் பிரதிநிதித்துவம் செய்யப்படுமானால், அதனை சிங்கள ஆட்சியாளர்கள் தங்களின் பிரித்தாளும் தந்திரத்திற்கு இலகுவாக பயன்படுத்திவிடுவார்கள். இந்த அடிப்படையில்தான், தமிழ் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் வழிநடத்தினர்.

இன்றும் அவ்வாறானதொரு நிலைமைதான் நமக்கு முன்னால் இருக்கின்றது. தமிழ் தேசிய அரசியல் தொடர்ந்தும் பலவீனமடைந்து செல்கின்றது. தமிழ் தேசிய அரசியல் பல அணிகளால் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதுதான் இதற்கான பிரதான காரணமாகும். இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்கான ஒரு சொல்லாகவே ஒற்றுமை என்னும் சொல் பயன்படுத்தப்படுகின்றது. மற்றும்படி, ஒற்றுமையென்பது, கட்சிகளை விட்டுவிட்டு ஒன்றில் அனைவரும் கலப்பதை பற்றி பேசவில்லை. மாறாக, அனைத்து கட்சிகளும், தமிழ் மக்களின் பேரம் பேசும் பலமாக மாறும் வகையில் ஒரு பொதுப் புள்ளியில் சந்திக்க வேண்டும். மக்களின் நலனுக்காக இதனை அனைத்து கட்சிகளும் கட்டாயம் செய்தாக வேண்டியிருக்கின்றது.

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**



“நாகரிகத்தின் வேர் காடுகள்தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன் , ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துகள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது.”

**இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)**

# 19,891 மெற்றிக் தொன் சீனி கையிருப்பில்!

*கொழும்பு, நவ. 19*

இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் அளவுகள் மற்றும் சந்தையில் விநியோகிக் கப்பட்ட அளவுகள் பற்றிய அறிக்கைகளை நுகர்வோர் அதிகார சபை வெளியிட்டுள் ளது.

இதனடிப்படையில், இறக்குமதி செய்யப்பட்ட களஞ்சியசாலைகளில் தற்போது தோராயமாக 19,891 மெட்ரிக் தொன் சீனி கையிருப்பில் இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது.

ஆகவே, சுமார் இரண்டு மாதங்களுக்கு நாட்டின் நுகர் வுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இந்தப் பங்கு போதுமானது எனவும் சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து சர்க்கரை இறக்குமதியாளர்களும் தங்கள் சர்க்கரை இருப்புக் களை கட்டுப்பாட்டு விலையில் சந்தைக்கு வெளியிடுமாறு நுகர்வோர் அதிகார சபை அண்மையில் தெரிவித்திருந்தது.

எனினும் கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு சந்தையில் சீனி விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத் துள்ளன.

இதற்கு பதிலடியாக, விலை விதிகளை மீறுபவர் களை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க நுகர்வோர் அதிகார சபை, சோதனை களை நடத்தி வருகிறது.

இறக்குமதி செய்யப்படும் சீனிக்கான வரியை கிலோகி ராம் ஒன்றிற்கு 25 சதத்திலி ருந்து 50 ரூபாவாக அதிக ரிக்க நிதியமைச் சகத்தினால் சந்தையில் சீனி தட்டுப்பாடு ஏற் பட்டது.

குறித்த விலையுயர்வு இந்த மாத கடைசி முதல் அமுலுக்கு வரும் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட சீனியின் விலை அதிகரிப்பை தடுக்க நிதிய மைச்சு விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் சீனிக்கான அதிக சில்லறை விலையை விதித்துள்ளது.

அந்த அறிவிப்பின்படி, ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் அதிகபட்ச சில்லறை விலை 275 ரூபாவாகவும் பொதியிடப்பட்ட சிவப்பு சீனி ஒரு கிலோ 330 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட வேண்டும் எனவும் அறிவிக் கப்பட்டுள்ளது.

(அ)

# தேசிய நடனப் போட்டியில் இளவாலை கன்னியர் மடம் ம.வி முதலிடம் பிடித்தது



*யாழ்ப்பாணம், நவ. 19*

2023 ஆம் ஆண்டுக்கான தேசிய நடனப் போட்டியில் யாழ்ப்பாணம், இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம் முதலிடத்தை சுவீகரித்துள்ளது. புத்தாக்கம், சுதந்திரம் எனும் தொனிப் பொருளிலான நடனம் முதலிடத்தை சுவீகரித்துள்ளது.

இதில் மாணவிகள் சோ. அபிசாயினி, யூ. சலோமியா மரிய தர்ஷனா, ச. கபினஜா, நி. மடோனா, சி. சாமந்தி, ரா.சஞ்சிதா, அ. லிபின்சியா, த.ஜெயஷாலினி ஆகியோர் இந்த நடனத்தில் பங்கேற்றி ருந்தனர்.

அத்துடன் ஆசிரியர்கள் மலர்விழி பிரேம்குமார், யுகந்தினி பாலசுப்ரமணியம் ஆகியோரின் நெறியாள்கை யில் குறித்த நடனம் இடம் பெற்றிருந்தது.

இதனிடையே கடந்த வருடமும் தேசிய ரீதியில் இடம் பெற்ற நடனப்போட்டியில் யாழ்ப்பாணம் இளவாலை கன்னியர் மடம் மாகாவித்தியாலயம் முதலாம் மற்றும் இரண்டாமிடங்களைப் பெற் றிருந்தது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -104

# அழுங்கிய மௌனங்களை உடைத்த பங்களிப்பும்...!

**கணபதி சர்வானந்தா**

ஈழுத்து நாடக உலகைப் பிரதிநிதிப்படுத்துபவர் கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள், 1970களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நாடக அரங்கக் கல்லூரி ஒன்றினை நிறுவி நாடகத்தை ஒரு பயிற்சி நெறியாகத் தமிழ் கலைஞர்கள் மத்தியில் அறிமுகம் செய்தார். இந்தப் பணி மூலமாக யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையிலேயே காத்திரமான நாடகத்துறை ஒன்று உருவாகக் கலாநிதி.குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் காரணமாக இருந்திருக்கின்றார்.

கடந்த 15ஆம் திகதி கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் தனது 92 ஆவது அகவையைக் கொண்டாடி மகிழ்ந்திருக்கிறார்.

அவரது நீண்ட கால நண்பரான பேராசிரியர் சின்னையா மௌனகுரு அவருக்கான பிறந்ததின வாழ்த்தாக அனுப்பிய செய்தியை முகநூலில் பின்வருமாறு பதிவிட்டிருக்கிறார். “இன்று குழந்தை சண்முகலிங்கம் 92 வயதடைந்திருக்கிறார். அவர் 15.11.1931 இல் பிறந்தவர். நான் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது அவரோடு இணைந்து 1978 தொடக்கம் 1991 வரை தொடர்ந்து 13 வருடங்கள் நாடகத்தில் இயங்கிய காலங்கள் ஞாபகத்துக்கு வருகின்றன. இன்றுவரை அவ்வுறவு தொடர்கிறது. இன்று காலை நானும் துணையான சித்திரலேகாவும் அவருடன் தொடர்பு கொண்டோம். குரல் தளர்ந்து போய் இருந்தாலும் பழைய பகிடி குறையவில்லை “அக்கா எப்படி இருக்கிறார்?” எனக் கேட்டேன் “என்றும் இளமையோடு இருக்கிறார்” என நகையோடு கூறினார். சண்ணின் நகைச்சுவை அப்படியே அவரிடம் இன்றும் இருக்கிறது. அவரது நாடகங்களில் நகைச்சுவை பீறீட்டு எழும் ஆனால் அந்த நகைச்சுவையின் பின்னால் ஒரு சோகம் இழையோடும். அந்தக் கலப்பு உணர்வைத்தான் அவர் கூறிய “என்றும் இளமையோடு இருக்கிறார்” என்ற வார்த்தைகள் எனக் குணர்த்தின.- என பேராசிரியர் மௌனகுரு எழுதியிருக்கிறார்.

கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் எழுதி இயக்கிய மண் சுமந்த மேனியர் என்ற நாடகம் யாழ்ப்பாணத்தின் பட்டி தொட்டியெல்லாம் மேடையேற்றப்பட்டு மக்கள் மத்தியில் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தது. அத்துடன் இவரது ஏனைய நாடகங்களான அன்னை இட்ட தீ, எந்தையும் தாயும் ஆகிய நாடகங்களும் மிகவும் பிரபல்யம் ஆனவை. இவரது ஆர்கொலோ சதுரர் நாடகம் எல்லா நாடகங்களிலும் உச்சமானது. யுத்தம் பற்றியது. “யுத்தத்தில் வெற்றி அல்லது முடிவு ஒன்றில்லை. தோற்பது மனிதம்தான்” என்பதைப் பாரதப் போரின் 14ம் நாளை மையப்படுத்தி எழுதியிருந்தார்.

இவர் இதுவரை நூற்றி இருபதிற்கும் மேற்பட்ட நாடகங்களை எழுதியிருக்கிறார். அவற்றில் சில நூலுருவிலும் வந்திருக்கின்றன. பிற மொழி நாடகங்களை சுவைகுன்றாது மொழிமாற்றுவதில் வல்லவரான குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள், நாடக ஆசிரியர்களான சோபாக்கிளிஸ், இப்சன், அன்ரன் - செக்கோவ், பேட்டல் - பிரக்சட், தாகூர் ஆகியோரின் நாடகங்களில் சிலவற்றையும், சில யப்பானிய நாடகங்களையும் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்.அவற்றுள் மொழிபெயர்ப்பு நாடகமான “தான் விரும்பாத் தியாகி” மிகவும் சிறந்த நாடகம் எனப் பலர் போற்றினர். அது இன்றும் ஆங்காங்கே மேடையேற்றப்பட்டு வருகிறது.

கடந்த 2022 ஜனவரி மாத தாய் வீடு இதழ் “விசேட குழந்தை ம.சண்முகலிங்கம் இதழாக” அவர் பற்றிய பல கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்தது.அதில் அவருக்கு நெருக்கமான பலர் அவர் பற்றி எழுதியிருக்கிறார்கள். கலாநிதி ம.குழந்தை சண்முகலிங்கம் பற்றிய பல விபரங்கள் அதில் உண்டு.

அந்தச் சிறப்பிதழிலே “நெருக்குவரா காலத்திலும் மண்ணில் இருந்து கொண்டு மண்ணின் அவலங்களை அரங்கேற்றிய மகா கலைஞனுக்கு ‘தாய்வீடு’ பத்திரிகை செய்யும் சிறு காணிக்கைதான் இந்தச் சிறப்பிதழ்.அண்மையில் அவர் அகவை 90 ஐ கண்டிருக்கும் நிலையில் இது பொருத்தமானதே.” எனக் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இலங்கைத் திரைப்படங்களில் குறிப்பிட்டுப் பேசப்படுகின்ற திரைப்படம் பொன்மணி. 1976 இல் வெளிவந்தது. அன்றைய யாழ்ப்பாணத்தையும் வாழ்க்கை முறையையும் ஆவணப்படுத்தி இருக்கும் ஒரு பொக்கிஷமாகக் கருதப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன் யாழ்பாணத்தில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாவில் பொன்மணி திரையிடப்பட்டு அதற்கான கௌரவம் வழங்கப்பட்டது. அத்திரைப்படத்திலே குழந்தை அவர்கள் நடித்துள்ளார்.

அவர் மொழிபெயர்த்த கவிதைகள் சில தாயகம் இதழில் பிரசுரமானதுடன் தாயகம் இதழின் ஆசிரியர் குழுவிலும் அங்கம் வகிக்கின்றார். ஈழத்தின் சிறுவர் நாடகத்தின் முன்னோடியான இவர் சிறுவர் நாடகங்களையும், பாடசாலை நாடகங்களையும் எழுதி இயக்கியிருக்கிறார். கூடிவிளையாடு பாப்பா, காட்டுராஜா, முயலார் முயல்கிறார் போன்ற நாடகங்கள் அவர் எழுதிய சிறுவர் நடாகங்களில் சில.

“குழந்தை சண்முகலிங்கம் அவர்களது அரங்கியற் கட்டுரையாக்கங்களும், நேர்காணல்களும் தனித்த ஒரு தொகுப்பு நூலாக இணுவில் கலை இலக்கிய வட்டத்தினரால் - கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களது முயற்சியினால் - வெளியிடப்பட்டுள்ளமை அறிக்கை நோக்கிலும், ஆய்வு நோக்கிலும் ஆர்வத்தைத் தூண்டியுள்ளதொரு புலமை நடவடிக்கையாகும்” என நாடக வழக்கு நூல் வெளியீட்டு விழாவில் ஆய்வுரை நிகழ்த்திய பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து ஆற்றிய உரையிலே “முரண்பாடுகளின் அடிப்படையாக எழும் இடை வினைகளை (Interactions) அரங்கியலிலே துல்லியமாக வெளிப்படுத்தி, அழுங்கிய மௌனங்களை உடைத்த பங்களிப்பும் குழந்தை அவர்களுக்கே உரியது. அரங்கை ஒரு பலமிக்க பல தள வழிமுறையாக (means) விசையுடன் பயன்படுத்திய குழந்தை அவர்கள் தமது சுயபடிமத்தை மௌனமாகவே வைத்துக் கொண்டார். பல தளங்களில் பன்மை (Plural) நோக்குடன் அரங்கை அவர் முன்னெடுத்தமையையும் மதிப்பீடுகள் மேற்கொண்டமையையும் இந்நூலில் இடம்பெற்றுள்ள 16 கட்டுரைகளும் தரும் புலக்காட்சிகளாகவுள்ளன. எமது பண்பாட்டுக்கும் எமது சூழலுக்குமுரிய பொருத்தமான அரங்கை (Appropriate Theatre) உருவாக்குவதற்குரிய முனைப்பு அவரது அரங்கியல் நிலையில் முன்னைய கட்டுமானங்களை குலைத்து மீள்கட்டுமானத்தை முன்னெடுத்துள்ளார். இவ்வாறு செய்யும்பொழுது ஒரு வித ஒருங்கிணைப்புத் தருக்கம் (Dialectics of Integration) அவரிடத்துக் காணப்படுகின்றது. இந்தத் தருக்கத்தினது அல்லது இயங்கியலினது அடிப்படையாகவே குழந்தை அவர்களது பரிசோதனைகளும், பரிசோதனைக் கருத்துக்களும் முகிழ்த்தெழுகின்றன.” என்று குறிப்பிட்டார்.

அவர் நீடு வாழ வேண்டும் என வாழ்த்தி மகிழ்கிறோம்.

# இந்தவார ராசிபலன் 19.11.2023 - 25.11.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - கார்த்திகை 03
நல்ல நேரம்: 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 06.00
திதி : சப்தமி




முயற்சி முன்னேற்றம் அடையும். புத்திசாலித்தனமாக செயல்பட்டு விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வீர். இழுபறியாக இருந்த வழக்கு முடியும். வருமானம் அதிகரிக்கும். திங்கள் செவ்வாயில் செயல்களில் விழிப்புணர்வு அவசியம். அந்தது உயரும். அரசு வழியில் இருந்த பிரச்னை முடிவிற்குவரும். அலுவலகத்தில் பணிபுரிவோருக்கு பாராட்டு உண்டாகும். நீண்ட நாள் முயற்சி ஒன்றில் வெற்றி காண்பீர். தொழிலில் லாபம் உண்டாகும்.




நீங்கள் எதிர்பார்க்கும் நன்மைகளை பெறுவீர்கள். முயற்சிகள் எளிதாக நிறைவேறும். எதிர்பார்த்த ஆதாயம் வரும். அரசு வழி முயற்சி வெற்றியாகும். வியாழன் அன்று செயலில் சில சங்கடம் தோன்றும். திட்டமிட்டு செயல்படும் வேலைகளில் லாபம் உண்டாகும். அரசு வழியில் உண்டான நெருக்கடிகளுக்கு தீர்வு ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட சங்கடம் விலகும். ஒரு சிலருக்கு புதிய வேலை வாய்ப்பு அமையும். வீடு, மனை வாங்கும் முயற்சி பலிக்கும்.செல்வாக்கு அதிகரிக்கும். வழக்கு சாதகமாகும். வருமானம் திருப்தி தரும்.




வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். செயல்களில் தெளிவு ஏற்படும். புதிய இடம் வாங்கும் முயற்சி நிறைவேறும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். உங்கள் செயல் லாபமாகும். எதிர்பார்த்த வருமானம் வரும். மற்றவரால் ஆதாயம் அதிகரிக்கும். உத்தியோகதர்களின் விருப்பம் நிறைவேறும், வெளிநாட்டில் இருந்து எதிர்பார்த்த தகவல் வரும். கடந்த வாரத்தில் ஏற்பட்ட சங்கடம் விலகும். புதிய முயற்சி ஒன்றில் லாபம் காண்பீர். திட்டமிட்ட செயல் விரைவாக நடக்கும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.




மனதில் இருந்த தயக்கம் நீங்கும். துணிச்சச்லுடன் செயல்பட்டு நல்லதை அடைவீர். உங்கள் செயலில் லாபம் அதிகரிக்கும். தொழில் நிலை சீராகும். வருமானம் உயரும். கவனமாக செயல்பட்டு நன்மைகளை அடைவீர். பாக்கியஸ்தான ராகுவால் உங்கள் எண்ணம் ஈடேறும். உங்கள் ராசி நாதனும் நன்மைகளை வழங்கும் நிலையில் சஞ்சரிப்பதால் முயற்சிகளில் வாரம் முழுவதும் உங்களுக்கு நன்மைகள் நடக்கும்.




சமீப காலமாக நெருக்கடிகளை சந்தித்து வந்த உங்கள் நிலையில் மாற்றம் உண்டாகும். அரசு ஊழியர்கள் அரசியல்வாதிகள் செல் வாக்கு உயரும். முயற்சிகள் வெற்றியாகும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் ஆதாயம் ஏற்படும். புதிய இடம் வாங்கும் முயற்சி நிறைவேறும். திறமை அதிகரிக்கும். எதிர்பார்ப்புகளை முறியடிப்பீர்கள். மூன்றாமிட சூரியனும் செவ்வாயும் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவார்கள்.




சுக்கிரன் நன்மையை வழங்குவார். ஏகாம்பரேஸ்வரரை வழிபட நன்மை அதிகரிக்கும். குழப்பம் அதிகரிக்கும். எந்தவொரு செயலிலும் ஒரு முடிவிற்கு வர முடியாமல் தடுமாறுவீர் என்றாலும் சுக்கிரன் உங்கள் ஆசைகளை நிறைவேற்றுவார். தடைப்பட்டிருந்த வருமானம் வரத் தொடங்கும். முயற்சியால் முன்னேற்றம் அடைவீர். லாபாதிபதி சந்திரனின் சஞ்சாரங்களால் உங்கள் எண்ணம் நிறைவேறும். ஒரு சிலர் புதிய சொத்து வாங்குவீர்கள். வியாபாரத்தை விரிவு செய்வீரகள். நீண்ட நாள் கனவுகள் நனவாகும்.




கடந்த வார சங்கடம் விலகும். ஆறாமிட ராகுவால் உங்களை எதிர்த்தவர் விலகுவார்கள்.உடலில் இருந்த பாதிப்பு நீங்கும். வியாபாரத்தில் உங்கள் எண்ணம் நிறைவேறும். உங்கள் ராசிநாதன் அருளால் உழைப்பிற்கேற்ற வெற்றியை அடைவீர்கள் வருமானத்தில் ஏற்பட்ட தடைகள் விலகும். வியாபாரம் விருத்தியாகும். ஒரு சிலர் புதிய வேலையில் அமர்வீர்கள் உங்களை அலட்சியம் செய்தவர் ஆச்சரியப்படும் நிலை உருவாகும்.




கடந்த வாரம் உண்டான நெருக்கடி விலகி நன்மை ஏற்படும். புதிய முயற்சி லாபமாகும். மூன்றாமிட சனியால் முன்னேற்றம் உண்டாகும். தொழில் வளர்ச்சி அடையும். பணவரவு அதிகரிக்கும். அரசு வழி விவகாரங்களில் கூடுதல் முயற்சி தேவைப்படும். ஆற்றல் அதிகரிக்கும் எதிர்ப்ர்ப்புகளை இல்லாமல் போகும். தடைப்பட்டிருந்த வருமானம் வரத்தொடங்கும். குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும்.




செல்வாக்கு உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சிச் அதிகரிக்கும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். ஒருசிலருக்கு புதிய சொத்துத் சேர்க்கை உண்டாகும். திங்கள் வரை திட்டமிட்டுட் செயல்படுவீர்கள் பணவரவு அதிகரிக்கும். வியாபாரம் அபிவிருத்தியாகும். முயற்சி லாபமாகும். செவ்வாய் புதனில் அலைச்சச்லும் செலவும் அதிகரிக்கும்.உங்கள் நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். சுறுசுறுப்பாக செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீரகள்.




வியாபாரத்தில் இருந்த தடை நீங்கும். வியாழன் அன்று செலவு அதிகரிக்கும். முன்னேற்றப் பாதையில் செல்வீரகள் புத்திசாலித்தனமாக செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள் தேவைக்கேற்ப வருமானம் வரும். குலதெய்வ வழிபாடு சங்கடம் தீர்க்கும். எதிர்கால நலன் கருதி சில முயற்சிகளை மேற்கொள்வீரகள் பணி புரியும் இடத்தில் வேலை பளு அதிகரிக்கும் என்றாலும் எதிர்பார்த்த் வருமானம் வரும். குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலை பளு அதிகரிக்கும்.





உங்கள் எதிர்பார்ப்பு கடும் முயற்சியினால் நிறைவேறும். புதிய முயற்சி இழுபறியாகும். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் போகும். உங்களை சோதித்து பார்க்கும் வகையில் சில சம்பவம் நடைபெறும் என்பதால் எச்சரிக்கை அவசியம். குடும்ப ஸ்தானத்தில் ராகு, விரய ஸ்தானத்தில் சனி சஞ்சரிப்பதால் குடும்பத்தில் பிரச்னைச் அதிகரிக்கும். விட்டுட்க்கொடுத்துச் செல்லவில்லை என்றால் சங்கடங்களை சந்திக்க வேண்டிய நிலை உருவாகும். சந்திராஷ்டமம் ஆரம்பம் என்பதால் எச்சரிக்கை அவசியம்.




கடந்த வாரத்தில் ஏற்பட்ட நெருக்கடி நீங்கும். துணிச்சலுடன் செயல்பட்டு தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். எதிர்பாலாரிடம் எச்சச்ரிக்கை அவசியம். உங்கள் நட்சத்திர நாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரித்துத் உங்கள் ராசியைப் பார்ப்பதால் உங்கள் செயல்களில் கவனம் இருக்கும். சனி, ஞாயிறு சந்திராஷ்டமம் என்பதால் விழிப்புணர்வு அவசியம்.உங்கள் முயற்சி எதிர்பாரத்த் வெற்றியை உண்டாக்கும். வெளிநாட்டு வேலைக்காக முயற்சித்தவர்களுக்கு நல்ல தகவல் வரும். நண்பர்கள் சிலர் உங்களை விட்டு விலகுவார்கள்.

# அமெரிக்காவில் சீன அதிபர்:
## “இரண்டு வல்லரசுகளைத் தாங்கும் பூமி இது!”



சென்னை மடல்
-பகவான் சிங்-

உலகமே உற்று நோக்கிய ஒரு முக்கிய நிகழ்வு புதன்று சன்பிரான்சிஸ்கோவில் நடந்தது. ஆசியா - பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு உச்சி மாநாட்டை (ஏபிஈசி-APEC) ஒட்டி, அமெரிக்க அதிபர் ஜோ பைடனுக்கும் சீன அதிபர் ஷீ ஜின்பிங்குக்கும் இடையில் நிகழ்ந்த சந்திப்பு தான் அது. கடந்த நவம்பரில் பாலியில் நடந்த சந்திப்புக்குப் பிறகு இப்போதுதான் அவர்கள் முதன்முதலில் சந்தித்தார்கள். கடந்த ஓராண்டில் இரு தரப்பு உறவுகள், முன்னெப்போதுமில்லாத அளவுக்கு மிகவும்

மோசமடைந்திருந்த சூழலில், இந்தச் சந்திப்பு, பதற்றத்தைக் குறைப்பதற்கான முதல் படியாக இருக்கும் என்று மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. அதற்கேற்பவே, இந்தச் சந்திப்பும், அதைத் தொடர்ந்து, இயற்கையெழில் கொஞ்சும் பில்யோலி எஸ்டேட்டில் இருவரும் உலா வந்துகொண்டே பேசியதையும் அடுத்து, எதிர்காலத்தில் அமெரிக்க-சீன உறவுகளைச் சிறப்பாகக் கட்டமைக்க இது உதவியதாக இரு தலைவர்களும் கூறியிருக்கிறார்கள்.

சில ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான இளம் அமெரிக்கர்களின் உயிர்களைக் காவுகொண்ட ‘பென்டனில்’ என்ற மருந்தை உற்பத்தி செய்யும் சீன நிறுவனங்களின் மீது நடவடிக்கை எடுப்பதாக ஷீயிடமிருந்து பைடன் உறுதிமொழியைப் பெற்றார். சட்டவிரோதமான வழிகளில் இந்த மருந்து அமெரிக்க சந்தையில் புகுந்து வந்தது. இரு நாடுகளுக்கு இடையிலான இராணுவ உறவுகளை மீண்டும் தொடர்வதான ஒப்பந்தமும், கண்மூடித்தனமான செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியைக் கண்காணிப்பதான ஒப்பந்தமும் இந்தப் பேச்சுவார்த்தைகளின் மூலம் எட்டப்பட்ட முக்கிய பலன்களாகும்.

ஷீயுடனான தனது சந்திப்பில் இடம்பெறவேண்டிய முக்கிய விஷயங்களாக இந்த மூன்றுக்கும் அமெரிக்கா முன்னுரிமை அளித்திருந்ததாகக் கூறப்படுகிறது. ஒத்துழைப்புக்கான உறுதியளித்த சீனா, பதிலுக்குத் தனக்கு வேண்டிய சில நலன்களையும் பெற்றிருக்கிறது. அமெரிக்க கொள்கைகளில் சில சலுகைகள், பொருளாதார வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்த வழிசெய்யும் வகையில் இருதரப்புப் பதற்றநிலை மேம்பாடு மற்றும் சீனாவைத் தொடர்ந்து புறக்கணித்துவரும் அயல்நாட்டு முதலீட்டாளர்களிடம் கோரிக்கை விடுக்கும் வாய்ப்பு ஆகியன ஷீ பெற்ற நன்மைகள். சீனாவின் பொருளாதார வளர்ச்சி வேகம் குறைந்து வருகிறது. அந்நாட்டில் கடைபிடிக்கப்படும் பிற்போக்குத் தனமான வணிக நடைமுறைகள் மற்றும் சீனாவில் பணிபுரியும் அமெரிக்கர்கள் மீதான கைது போன்ற கெடுபிடி நடவடிக்கைகள் காரணமாக அயல்நாட்டு முதலீட்டாளர்களிடம் ஏற்பட்டுள்ள நம்பிக்கையிழப்பைச் சரிசெய்ய ஷீ கடினமாக உழைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

தமது அதிபர், பைடனுடன் எஸ்டேட்டில் மேற்கொண்ட உலா மற்றும் உச்சி மாநாட்டின்போது அமெரிக்க பெரு நிறுவனத் தலைவர்கள் ஷீ-க்கு ஒருமுறை அல்ல, மூன்று முறை எழுந்து நின்று கரவொலி எழுப்பி வரவேற்ற நிகழ்வு ஆகியவற்றை சீன ஊடகங்கள் மீண்டும் மீண்டும் ஒளிபரப்பிவந்தன. தங்கள் தலை வரின் அமெரிக்க பயணம் வெற்றிகரமாக இருந்ததை வலியுறுத்தும் விதமாக இது அமைந்திருந்தது. ஷின்ஜியாங் மாகாணத்தைப் பூர்வீகமாகக்கொண்ட சுன்னி முஸ்லிம் துருக்கிய இனக்குழுவான உய்குர்களின் மீதான சீனாவின் கொடுமைகள் குறித்த குற்றச்சாட்டின்

அடிப்படையில் 2020ஆம் ஆண்டில், அமெரிக்க வர்த்தகத் துறை, சீனப் பொது நிதித் தடயவியல் அமைப்பு ஒன்றின்மீது விதித்திருந்த வர்த்தகத் தடை விலக்கிக்கொள்ளப்பட்டதுடன் இந்தப் பிம்பக் கட்டமைப்பும் இணைந்துள்ளது. இந்த உய்குர் இனத்தவர் மீது, சீன கம்யூனிஸ அரசு, கூட்டம் கூட்டமாகக் காவலில் வைப்பது, குழந்தைத் தொழிலாளர் முறை, குழந்தை பெற்றுக்கொள்ளத் தடை மற்றும் தீவிர கண்காணிப்பு போன்ற மனித உரிமை மீறல்களைக் கட்டவிழ்த்து விட்டதாக எழுந்த குற்றச்சாட்டுகளை அடுத்து, இந்தத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அந்தத் தடயவியல் அமைப்பின் மீதான அமெரிக்காவின் வர்த்தகத் தடைகளை அகற்றச்செய்வது என்பது சீனாவின் நீண்ட நாள் நோக்கமாக இருந்தது. அதைச் சாதித்திருப்பது குறித்து ஷீ மகிழ்ச்சியில் இருப்பார். ஆனால், அதற்கு மாற்றாக, உய்குர் இனத்தவரின் நன்மைகளுக்காகத் தனது ஆட்சி செயல்படும் என்று பைடனுக்கு அவர் உறுதியளித்திருக்கிறாரா என்றால் இல்லை. ஏனெனில், இனி அமெரிக்காவுக்கு உய்குர் இனம் ஒரு பொருட்டே இல்லை.

சீன நிறுவனத்தின் மீதான இந்தத் தடை அகற்றம் குறித்த கடும் விமரிசனங்கள் அமெரிக்க அரசியல் மற்றும் செய்தி ஊடகங்களிடையே பரவலாக எழுந்தன. “நமது பட்டியல் மற்றும் தார்மீக அதிகாரத்தின் மீதான நம்பிக்கைக்கு இது இழுக்கு” என்று குடியரசுக் கட்சி தலைமையிலான பிரதிநிதிகளின் தேர்வு செய்யப்பட்ட குழு ஒன்றின் செய்தித் தொடர்பாளர் குறிப்பிட்டுள்ளார். ஆனால், பைடன் இதைப்பற்றிக் கவலைப்படுவாரா?

மேற்குலக வல்லரசுகள், குறிப்பாக அமெரிக்கா எப்போதுமே, சுயநலமாகவே காய் நகர்த்தி, மற்றவர்களின் மீது ஆதிக்கம் செலுத்தும் வகையில், மனித உரிமைகளின் வரையறையையே மாற்றி, திரித்துக் களம் காண்பவை என்பதை இங்கு பலமுறை குறிப்பிட்டிருக்கிறேன். இது உங்களுக்கும் தெரியும். மேற்குலக நாடுகளின் இரட்டை நிலைப்பாட்டுக்கு, மூன்றாம் உலக நாடுகளான நாம் பல முறை பலியாகியும் வந்திருக்கிறோம். ஈழத்துக்குப் பெரிதும் தொடர்பில்லாததாகத் தோன்றக்கூடிய பைடன்-ஷீ சந்திப்பு குறித்து நான் இவ்வளவு விவரமாகக் கூறுவதற்குக் காரணம், நமது மூன்றாம்

## ஷீ சொல்வது என்ன?

உலக நாடுகளின் தற்சமய சமூக-அரசியல்-பொருளாதார பிரச்னைகளிலிருந்து விடுபட்டு, மீள்திறன் கொண்ட மக்களாக நாம் உருவெடுக்க உழைக்கவேண்டியதன் அவசியத்தை வலுயுறுத்தத்தான். இந்தப் பெரு முயற்சியின் ஒரு முக்கிய தேவை, ‘ஒற்றுமை’ - மதம், பிராந்தியம் கடந்த ஒற்றுமை. பைடன்-ஷீ உச்சிமாநாட்டைக் கூர்ந்து நோக்குங்கள். அந்த சன்பிரான்சிஸ்கோ உச்சி மாநாட்டில் நடந்தது என்ன? அந்த இரண்டு வல்லரசுகளில் யார் உலகை அதிகம்

கட்டுப்படுத்த முடியும் என்பதைப் பார்க்கவே இந்தச் சந்திப்பு. அதில், ஷீ, பைடனிடம், “இரண்டு வல்லரசுகளைத் தாங்கும் வல்லமை படைத்தது இப்பூமி” என்று கூறியுள்ளார். அதாவது, பனிப்போர் காலத்திற்குப் பிறகான சகாப்தத்தில், இந்த உலகத்தையும் அதன் மக்களையும் தேசங்களையும், நாம் இருவரும் எப்படிப் பங்கு பிரித்துக்கொள்வது என்பது பற்றி அமைதியாகப் பேசி முடிவெடுக்கலாம் என்பதுதான் இதன் பொருள். மாறாக, “நம் உலகம் மனித இனம் முழுவதையும் தாங்கக்கூடியது. எல்லோருடைய தேவைகளையும் பூர்த்தி செய்யும் வலிமை கொண்டது” என்று ஷீ கூறியிருந்தால், நாம் அவரைப் போற்றியிருப்போம் காம்ரேடுக்கு சல்யூட் வைத்திருப்போம்.

## ‘நேர்மையான அரசியல்வாதிகளும் இனம்காணும் வாக்காளர்களும்’

இந்த இருவரில், ஷீ அதிக வலுவானவர் - காரணம், அவர் தனது முடிவுகளை மனம்போன போக்கில், யாருடைய ஆலோசனைகளுக்கும், விமரிசனங்களுக்கும் செவிசாய்க்காமல், தானே எடுக்கும் வல்லமை பெற்றவர். ஆனால், ஜனநாயக நாடு என்று சொல்லிக்கொள்ளும் அமெரிக்காவில், பைடன் அடுத்த ஆண்டு தேர்தலை எதிர்கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறார். மீண்டும் ட்ரம்ப் தேர்வுசெய்யப்படும் வாய்ப்புள்ளதாக ஏற்கெனவே ஊடகங்கள் கூறிவருகின்றன. அமெரிக்கர்கள் வினோதமானவர்கள். கடந்த தனது ஆட்சிக் காலத்தில் வெள்ளை மாளிகையில் ட்ரம்ப் செய்த அதிகார துஷ்பிரயோகம் குறித்த விசாரணைகள் நடந்துவரும் நிலையிலும் மக்களிடையே அவரது செல்வாக்கு அதிகரித்து வருகிறது என்றும் செய்திகள் கூறுகின்றன.

சன்பிரான்சிஸ்கோ உச்சிமாநாட்டில் இன்னும் சில வேடிக்கைகளும் நிகழ்ந்தன. பைடனின் தனிச் செய்தியாளர் சந்திப்பொன்றில் ஒரு நிருபர், அவரிடம், “ஜூன் மாதம் ஷீ ஒரு சர்வாதிகாரி என்று விமர்சித்த கருத்து இப்போது மாறிவிட்டதா?” என்று கேட்டார். “இப்போதும் அவர் சர்வாதிகாரிதான். நமது நாட்டுக்கு முற்றிலும் மாறுபட்ட சித்தாந்தத்தைக்கொண்ட ஒரு கம்யூனிச நாட்டை வழிநடத்தும் அவர் சர்வாதிகாரிதான்” என்றார் பைடன். இதனால் சீனா ஆத்திரமடைந்தது என்று கூறவும் வேண்டுமா? பைடனின் பெயரைக் குறிப்பிடாமல், சீன வெளியுறவு அமைச்சகம், “இந்த விமர்சனம் (சர்வாதிகாரி) மிகவும் தவறானது மற்றும் பொறுப்பற்ற அரசியல் நகர்வு” என்று குமுறியுள்ளது. ஒரு சர்வாதிகாரியை சர்வாதிகாரி என்று சொன்னால் அவருக்கு ஏன் கோபம் வரவேண்டும் என்று நீங்கள் வியக்கலாம். வெள்ளை மலர் வைத்த சிவப்புத் தொப்பி அணிந்த ஒருவர், தன்னைப் பிறர் வெள்ளை மலர் வைத்த சிகப்புத் தொப்பி அணிந்திருக்கிறார், பார் என்று கூறுவதால், ஏன் கோபிக்கவேண்டும்? சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம் என்று எந்த நிறத்தை வேண்டுமானாலும் ஒருவர் தேர்ந்தெடுக்கலாம். அதில் பெருமை கொண்டு, விமர்சனங்களுக்குச் செவிமடுக்காமல் இருக்க வேண்டும் அல்லது தொப்பியை மாற்றவேண்டும். ஆனால், சில தொப்பிகளை அப்படிச் சுலபமாக

மாற்றிவிட முடியாது என்பதையும் நாமறிவோம்.

சன்பிரான்சிஸ்கோவிலிருந்து நமது தாய் மண்ணுக்கான பயணத்தைத் தொடங்குமுன், ‘சர்வாதிகாரி’ என்ற சொல்லின் பரந்த பொருளைப் பார்ப்போம். கட்சியையும் அரசையும் செலுத்தும் கம்யூனிச சித்தாந்தத்தின்கீழ், எதிர்கருத்துக்கான தண்டனை வழங்குவதில் புதிய நடைமுறையைக் கடைபிடிக்கும் அளவுக்குச் சகிப்புத் தன்மையின்மை அதிகரித்திருப்பதாக எழும் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் மட்டும், ஷீயை சர்வாதிகாரி என்று கூறிவிட முடியாது. தான் நினைப்பதையும்

செய்வதையும் எதிர்த்து யாரும் எதுவும் கூறக்கூட அனுமதியில்லை என்பதுதான் முக்கிய குற்றச்சாட்டு. அண்மையில் நான் படித்த ஒரு விஷயத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்:

“கடந்த இரண்டு மாதங்களாக, எந்த விளக்கமும் இன்றிப் பொதுவெளியில் காட்சியிலிருந்து மறைந்தார் பாதுகாப்புத்துறை அமைச்சர் லீ ஷாங்பு என்று அந்நாட்டு செய்தி ஊடகம் ஒக்ரோபர் 24 அன்று செய்தி வெளியிட்டது. இந்த ஆண்டு மாயமான சீனாவின் இரண்டாவது மூத்த அதிகாரி லீ. இதற்கு முன், வெளியுறவு அமைச்சர் க்வின் காங்க் எந்த விளக்கமும் இன்றி, ஜூலை மாதம் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.” ஒரு நாட்டின் பாதுகாப்பு அமைச்சரும் அயலுறவுத் துறை அமைச்சரும் ஒரு சாதாரண அரசு ஊழியரைப்போல, ஒரு மேலாளருக்குப் பிடிக்கவில்லை என்ற காரணத்திற்காக பந்தாடப்படக்கூடிய பதவிகளல்ல.

இப்போது அமெரிக்க அதிபர் விஷயத்துக்கு வருவோம். உலகின் மிகப்பெரிய மற்றும் மிக வலிமையான ஜனநாயக நாடு அமெரிக்கா என்று மார்தட்டிக்கொள்கிறார் அவர். அமெரிக்க நிர்வாகம் என்பது, அமெரிக்கர்களின் ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாக்கக்கூடிய ‘சிறந்த மதிப்பீடுகளை’க் கொண்டது. ஆனால், உலக ஒழுங்கில், மூன்றாம் உலக நாடுகளான சிறிய நாடுகளின் தேவைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் அமெரிக்க ஜனநாயகத்தில் எந்த அளவு இடமளிக்கப்படுகிறது? தனது நாட்டுக்குள் ஜனநாயக காவலராகச் செயல்படும் அமெரிக்க அதிபர், இரு பெருங்கடல்களுக்கு அப்பால் உள்ள ஒடுக்கப்பட்ட நாடுகளில் தனது கொடும் ஆதிக்கத்தைச் செலுத்துவதில் மகிழ்ச்சியடைகிறார் என்று கூறுவது எப்படித் தவறாகும்? ‘இரண்டு வல்லரசுகளின் சாம் ராஜ்யங்களைக் கொள்ளும் பரப்பளவு பெற்றது இந்தப் பூமி’ என்றார் ஷீ, பைடனுடனான தனது சந்திப்பின்போது. அதாவது, இந்தப் பெரும் உலகத்தைக் கூறு போட்டுக் கொள்கிறார்கள் இந்த இரண்டு தலைவர்கள். இந்த இரண்டு கூறுகளில், பிச்சைப் பாத்திரத்துடன் நாம் இங்கா அங்கா என்று அலையவேண்டுமா? வேண்டாம். வாருங்கள், மூன்றாம் உலகமே! நாம் ஒன்று படுவோம்.

நமது வலிமைகளையும் வளங்களையும் உறுதிப்பாட்டையும் நமது ஒற்றுமையுடன் பின்னி முன்னேறு வோம் இதற்கு உழைப்போம். இதற்கெல்லாம் அதிக காலம் பிடிக்குமே என்ற அச்சம் வேண்டாம். சிறந்த வரலாறு ஒரு நாளிலோ ஒரு தனி மனிதனின் முயற்சியிலோ உருவாவதில்லை.

வாட்ஸப்பில் ஒரு நண்பர் சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங்க் தனது மக்கள் செயல் கட்சி (பி ஏ பி) கூட்டத்தில் உரையாடிய காணொலி ஒன்றை அனுப்பியிருந்தார். அந்த நான்கு நிமிடக் காணொலியை முழுவதும் பார்த்த எனக்கு மயிர்க்கூச்செறிந்தது. கண் கலங்கியது. லூங்கின் உரையில் முக்கிய அடிநாதமாக இருந்தது, “நமது நிர்வாக அமைப்பைத் தூய்மையாக வைத்திருங்கள்” என்பதே. இந்த அறைகூவலை அவர் தனது கட்சி உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல், எதிர்க் கட்சியினருக்கும், அதோடு, வாக்காளர்களுக்கும் விடுத்தார். அவர், “நமக்கு நேர்மையான அரசியல்வாதிகள் வேண்டும். அத்துடன், நேர்மையானவர்கள் யார், அல்லாதவர்கள் யார் என்று பிரித்தறியும் திறன்கொண்ட வாக்காளர்களும் வேண்டும்” என்றார். சிங்கப்பூர் மக்கள்

புத்திசாலிகள் - முன்னாள் பிரிகேடியர் ஜெனரலான லூங்க், 2004 முதல் நாட்டின் மூன்றாவது பிரதமராக, தனது பி ஏ பி கட்சியைத் தொடர்ந்து நான்காவது முறையாக ஆட்சியில் அமரச் செய்தவர்.

உங்கள் இனிய குடும்பத்துடன் காலை உணவைச் சுவைக்குமுன், பிரதமர் லூங்க் உதிர்த்த இன்னொரு முத்தை இதோ தருகிறேன். அந்தக் கட்சிக் கூட்டத்தில் முந்தைய தினம் ஒரு மருத்துவர் உரையாற்றும்போது, “புகழ் என்பது தற்காலிகமானது, ஒழுக்கமே நிரந்தரமானது” என்று கூறியதைப் பிரதமர் மேற்கோள் காட்டினார். ஆம். புகழ் தற்காலிகமானதுதான். ஒழுக் கமே நிரந்தரமானது. தட்டில் உள்ள உணவின் சுவை தற்காலிகமானது. ஆனால், அது நம் உடலுக்கு வழங் கும் ஆரோக்கியம் நிரந்தரம்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவது குறித்து கூற மறுக்கும் ரணில்!



வீரகத்தி
தனபாலசிங்கம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலை தவிர வேறு எந்த தேர்தலைப் பற்றியும் பேசுவதில்லை. ஆனால், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடப்போவதாக இதுவரையில் அவர் அறிவித்ததுமில்லை. ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிட்டு பெருவெற்றி பெறுவார் என்று ஐக்கிய தேசிய கட்சி அரசியல்வாதிகள் மாத்திரமே பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

விக்கிரமசிங்கவை எதிர்த்து வேறு எவரும் போட்டியிடக்கூடாது என்று அந்த கட்சியின் தவிசாளரான பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன சில வாரங்களுக்கு முன்னர் கூறியதை எவரும் மறந்திருக்க மாட்டார்கள். அடுத்த ஜனாதிபதியாக விக்கிரமசிங்க போட்டியின்றி தெரிவாகவேண்டும் என்பது அவரின் விருப்பமாக இருக்கிறது போலும்.

கடந்த மாதம் கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய தேசிய கட்சியின் விசேட மகாநாட்டில் உரையாற்றியபோது அரசியலமைப்பின் பிரகாரம் 2024 பிற்பகுதியில் ஜனாதிபதி தேர்தலும் அதைத் தொடர்ந்து பாராளுமன்ற தேர்தலும் உள்ளூராட்சி தேர்தலும் நடைபெறும் என்று அறிவித்த ஜனாதிபதி அந்த தேர்தல்களுக்கு தயாராகுமாறு தனது கட்சியினரை கேட்டுக்கொண்டாரே தவிர கட்சியின் வேட்பாளர் பற்றி எதுவும் கூறவில்லை.

தேர்தல்களை இலக்குவைத்தது என்று எதிரணி அரசியல் கட்சிகளினால் வர்ணிக்கப்படும் 2024 பட்ஜெட்டை கடந்த திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த ஜனாதிபதி மறுநாள் மாலை தனது செயலகத்தில் பத்திரிகை ஆசிரியர்களை சந்தித்தார். ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதை உறுதிசெய்யவோ அல்லது போட்டியிடக்கூடிய சாத்தியத்தை நிராகரிக்கவோ இல்லை. பொறுத்திருந்து பார்க்கப்போவதாகவே அவர் கூறினார்.

நாட்டின் வங்குரோத்து நிலையை முடிவுக்கு கொண்டுவருவதில் தற்போது முழுக் கவனத்தையும் செலுத்தியிருப்பதால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதா இல்லையா என்று இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று கூறிய விக்கிரமசிங்கவிடம் ஐக்கிய தேசிய கட்சியின் எதிர்காலம் குறித்து கேட்டபோது பொருளாதாரம் குறித்து உண்மையைப் பேசியவர்கள் தனது கட்சியினர் மாத்திரமே என்பதால் கடந்த பாராளுமன்ற தேர்தலில் தாங்கள் தோற்கடிக்கப்பட்டதாகவும் கட்சியை மீள அணிதிரட்டிக் கொண்டு அடுத்த வருடம் தேர்தல்களுக்கு தயாராகப்போவதாகவும் பதிலளித்தார்.

'எனது முதற்பணி வங்குரோத்து நிலையை முடிவுக்கு கொண்டுவருவதே. அதை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். அதற்கு பிறகு என்ன நடக்கிறது என்பதை பார்ப்போம். தேர்தல்களில் ஐக்கிய தேசிய கட்சி போட்டியிடும். உண்மையை பேசுபவர்கள் என்பதால் வெற்றி பெறுவதில் நம்பிக்கை வைத்திருக்கிறோம். பல புதுமுகங்களும் வந்திருக்கிறார்கள். அரசாங்கத்திலும் எதிரணியிலும் உள்ள பல கட்சிகளும் போட்டியிடும்" என்று அவர் மேலும் கூறினார்.

ஜனாதிபதி தேர்தல்கள் என்று வரும்போது வெற்றி பெறுவதற்கு தனக்கு வாய்ப்பு இல்லை என்று கண்டால் விக்கிரமசிங்க அவற்றில் போட்டியிடுவதில் இருந்து ஒதுங்கிக் கொள்வதை வழக்கமாகக் கொண்டவர். முதல் இரு தடவைகள் தோல்வி கண்ட அவர் கடந்த மூன்று ஜனாதிபதி தேர்தல்களில் வேறு வேட்பாளர்களுக்கு ஆதரவளித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக மூன்று தசாப்தங்களாக இருந்துவரும்

**தனக்கு வெற்றிவாய்ப்பு இல்லையென்று கண்டால் ஜனாதிபதி தேர்தல்களில் போட்டியிடுவதில் இருந்து ஒதுங்கும் வழக்கத்தைக்கொண்ட விக்கிரமசிங்க கூடியவிரைவில் ஏதாவது ஒரு முடிவை அறிவிக்கவேண்டிய நிர்ப்பந்தம் வரும்.**

அவர் இரு பாராளுமன்ற தேர்தல்களில் வெற்றிபெற்று அரசாங்கத்தை அமைத்து பிரதமராக வரமுடிந்தபோதிலும் முழுமையாக ஐந்து வருடங்களுக்கு பதவியில் நீடிக்க முடிந்ததில்லை. இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகவும் கூடுதலான காலம் எதிர்க்கட்சி தலைவராக பதவி வகித்த 'பெருமை' அவருக்கே உரியது.

இறுதியாக நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியினால் ஓர் ஆசனத்தைக் கூட வென்றெடுக்கமுடியாத நிலையில் தேசியப்பட்டியல் மூலமாக கிடைத்த ஒரேயொரு ஆசனத்தைப் பயன்படுத்தி பத்து மாதங்கள் கழித்து பாராளுமன்றத்துக்கு மீண்டும் வந்த விக்கிரமசிங்க எவருமே எதிர்பார்த்திராத வகையில் மாற்றமடைந்த அரசியல் கோலங்களின் விளைவாக கால் நூற்றாண்டு காலமாக தன்னிடமிருந்து நழுவிக்கொண்டிருந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை வசப்படுத்தக்கூடியதாக இருந்தது.

இலங்கையில் பாராளுமன்றத்தினால் தெரிவான முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான விக்கிரமசிங்க தேர்தல் ஒன்றில் மக்களின் ஆணையுடன் ஜனாதிபதியாக அதிகாரத்துக்கு வரவேண்டும் என்ற விருப்பத்தைக் கொண்டிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இன்னமும் ஒரு வருடத்துக்கும் குறைவான காலத்திற்குள் நடத்தப்படவேண்டியதாக இருக்கும் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவது குறித்து திட்டவட்டமாக எதையும் கூற அவர் தயாராயில்லை.

விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவுசெய்த ராஜபக்ஷக்களின் சிறிலங்கா பொதுஜன பெரமுன அடுத்த ஜனாதிபதி தேர்தலில் அவரை ஆதரிக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு நிலவிய கட்டம் ஒன்று இருந்தது. ஆனால், இப்போது அந்த நிலைமை இல்லை.

பொதுஜன பெரமுன அதன் வேட்பாளரைக் களமிறக்கும் என்று தொடர்ச்சியாகக் கூறிக் கொண்டிருக்கிறது. அந்த வேட்பாளர் ஒரு ராஜபக்சவை தவிர வேறு யாருமாக இருக்க பெரும்பாலும் வாய்ப்பு இல்லை.

தேசிய தேர்தல்களை இலக்கு வைத்து பரந்தளவிலான கூட்டணியொன்றை அமைப்பதில் விக்கிரமசிங்க அக்கறை காட்டுகின்றபோதிலும், அதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படுவதாக தெரியவில்லை.

பொதுஜன பெரமுனவில் இருந்தும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்தும் பாராளுமன்ற உறுப்பினர்களை தன்பக்கம் இழுக்கும் ஜனாதிபதியின் வியூகத்துக்கு அண்மையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நஷீர் அஹமட் பதவிகளை இழக்க காரணமாக இருந்த உயர்நீதிமன்ற தீர்ப்பு பெரும் பின்னடைவாகப் போய்விட்டது.

உண்மையில், ஐக்கிய தேசிய கட்சியோ அல்லது பொதுஜன பெரமுனவோ தேர்தல் ஒன்றுக்கு முகங்கொடுக்கக்கூடிய செல்வாக்குடன் இல்லை. ஆனால், எந்த தேர்தல் நடந்தாலும், தங்களது கட்சி வெற்றிபெறும் என்று ராஜபக்ஷக்கள் ஒருவர்மாறி ஒருவர் நாட்டு மக்கள் தங்களைப் பற்றி



**ராஜபக்ஷக்களுக்கு எதிரான சக்திகளுக்கு வலுவான ஒரு ' ஆயுதமாக ' உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைத்திருக்கிறது. அடுத்து வரக்கூடிய எந்த தேர்தலிலும் அவர்களுக்கு எதிரான பிரதான பிரசாரக் கருவியாக தீர்ப்பு இருக்கும்.**

என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றி சிந்திக்காமல் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

பொருளாதார வீழ்ச்சிக்கு ராஜபக்ஷக்களே பொறுப்பு என்று கடந்தவாரம் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அவர்களின் நிலையை மேலும் பலவீனப்படுத்தியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

இது இவ்வாறிருக்க, உள்ளூராட்சி தேர்தலுக்கும் மாகாணசபை தேர்தலுக்கும் நேர்ந்த கதிக்கு பிறகு தேசிய தேர்தல்களுக்கு என்ன நேருமோ என்ற பயம் மக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இருக்கிறது. இதற்கு அரசாங்கத் தரப்பிலிருந்து வருகின்ற அறிவிப்புக்களே முக்கிய காரணமாகும்.

ஐக்கிய தேசிய கட்சியின் மகாநாட்டில் தேசிய தேர்தல்கள் குறித்து அறிவித்த சில தினங்களில் ஜனாதிபதி விக்கிரமசிங்க தேர்தல் சட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் விரிவாக ஆராய்ந்து சமகாலத் தேவைகளுக்கு பொருத்தமான முறையில் தேர்தல் சட்டங்களில் திருத்தங்களைக் கொண்டு வர அவசியமான விதப்புரைகளைச் செய்வதற்கு முன்னாள் பிரதம நீதியரசர் பிரி யசத் டெப் தலைமையில் பத்துப் பேரைக் கொண்ட விசாரணை ஆணைக்குழு வொன்றை நியமித்தார்.

பெண்கள், இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல், நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இலத்திரனியல் வாக்குப்பதிவுக்கு வாய்ப்பளித்தல், வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் வாக்களிப்பதற்கு வசதிசெய்தல், பாராளுமன்ற தேர்தலிலும் மாகாணசபை தேர்தலிலும் போட்டியிடும் ஒருவர் மக்களினால் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் இரு சபைகளிலும் ஏககாலத்தில் அங்கம் வகிப்பதற்கு வசதிசெய்தல் என்று பெருவாரியான ஏற்பாடுகளுக்கான சாத்தியம் குறித்து ஆராயுமாறு அந்த ஆணைக்குழுவிடம் கேட்கப்பட்டிருக்கிறது.

ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆறு மாதகால அவகாசத்திற்குள் அல்லது அடுத்த ஜனாதிபதி தேர்தல் வருவதற்கு முன்னதாக அதனால் பணிகளை நிறைவுசெய்யக்கூடியதாக இருக்குமா என்று அரசியல் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புக்களும் ஏற்கெனவே கேள்வி யெழுப்பத் தொடங்கிவிட்டன.

ஆணைக்குழு அதன் அறிக்கையை உரிய காலத்தில் கையளித்தாலும் கூட அதனால் முன் வைக்கப்படக்கூடிய விதப்புரைகள் தொடர்பில் சட்டவாக்க செயன்முறைகளை முன்னெடுப்பதற்கும் ஒரு கணிசமான காலம் எடுக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து ஜனாதிபதி பேசும்போது தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு அவர் உபாயங்களை தேடுகிறார் என்பது பொதுவெளியில் பரவலான கருத்தாக இருக்கிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# ரணிலின் 2024 பட்ஜெட் யோசனை ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனம்!

பனங்காட்டான்

தமிழ் சினிமா பாணியில் சொல்வதானால், அனைவராலும் - ஆளும் தரப்பு, எதிர் தரப்புகள், சமூக அமைப்புகள், தொழிலாளர் சங்கங்கள் என்று எல்லாத் தரப்பாலும் எதிர்பார்க்கப்பட்ட 2024ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை ஒருவாறு ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துவிட்டார்.

இதன் மீதான ஒரு மாத விவாதங்களைத் தொடர்ந்து அடுத்த மாதம் 13ம் திகதி இறுதி வாக்கெடுப்பு இடம்பெறும். எதிர்க் கட்சிகள் எவ்வளவுதான் கூப்பாடு போட்டாலும் வரவு - செலவுத் திட்டம் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையில் ரணில் விக்கிரமசிங்க மிகவும் திடமாக உள்ளார்.

இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுன இதனை ஆதரித்து நிறைவேற்ற வேண்டிய நெருக்கடியில் உள்ளது. அரகலவினால் ஆட்சியிலிருந்து கவிழ்க்கப்பட்ட கோட்டாபய, அமைச்சுப் பதவிகளைத் துறந்து ஓடிய அவரது சகோதரர்கள், அவர்களின் பிள்ளைகள் என்போர் தொடர்ந்து அரசியலில் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டுமெனில் ரணில் விக்கிரமசிங்கவை காப்பாற்ற வேண்டிய தேவை இவர்களுக்கு அவசியம்.

வரவு செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட யோசனைகள் (இவை யோசனைகள் மட்டும்தான்) ஒருபோதும் நடைமுறைப்படுத்த முடியாதவை என்பது 225 எம்.பி.க்களுக்கு மட்டுமன்றி அனைவருக்கும் தெரியும்.

நாளாந்த வாழ்வுக்கான நிதிக்கே உலகிடம் கை நீட்டிக் கொண்டிருக்கும் நிலையில் அள்ளி அள்ளி செலவு செய்யக்கூடிய போதிய நிதிவளம் நாட்டில் இல்லை. வசதி குறைந்தவர்களுக்கு கடந்த ஆகஸ்ட் மாதம் வழங்கியிருக்க வேண்டிய சமுர்த்தி உதவியே இன்னமும் முழுமையாக கொடுபடாத நிலையில், கோடானகோடி ரூபாவை வரவு செலவுத் திட்ட யோசனைகளை நிறைவேற்ற எங்கிருந்து பெறுவது?

அறுபதுக்கும் அதிகமான யோசனை அறிவிப்புகளைக் கொண்ட அறிக்கையை வாசிக்கும்போது, ரணில் விக்கிரமசிங்க தமக்கு விருப்பமான ஒவ்வொருவரையும் பார்த்து சிரித்து உரையாடியவாறு செயற்பட்டார் என்ற செய்தியைப் படித்தபோது, இதுதான் ரணிலின் பாணி என்பதை அறிந்தவர்கள் தெரிந்திருப்பர்.

இவரால் முன்வைக்கப்பட்ட ஐந்து டசின் வரையான யோசனைகளில் சுமார் ஒரு டசின் வரையானவை தமிழர் சம்பந்தமான வடக்கு கிழக்கு சம்பந்தப்பட்ட தண்ணீர்ப் பிரச்னை, மீள்குடியேற்றம், கடற்றொழில் அபிவிருத்தி, காணாமலாக்கப்பட்டோர் இழப்பீடு, நகர நிர்மாணம், முதலீட்டு மையங்கள், குடிநீர்ப் பிரச்சனை, திருமலை துறைமுக அபிவிருத்தி என்று பலவற்றை உள்ளடக்கியிருப்பதை சற்றுக் கூர்ந்து அவதானிக்க வேண்டும்.

இதற்கு முன்னைய எந்தவொரு வரவு செலவுத் திட்டத்திலும் இல்லாதவாறு இவ்வளவு தூரத்துக்கு தமிழர் பிரதேச தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. ரணிலின் கடந்த ஒரு வருடத்தைத் தாண்டிய ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் தமிழர் அரசியல் பிரதிநிதிகளுடன் அவர் நடத்திய பேச்சுவார்த்தைகளையும் அளித்த வாக்குறுதிகளையும் மீள்நோக்கிப் பார்க்கின் எதனையுமே அவர் நிறைவேற்றவில்லை என்பது தெரியவரும். இதுதான் வரவு செலவுத் திட்ட யோசனைகளுக்கும் நடைபெறப்போகிறது.

கடந்த ஒரு வருடத்தில் கெட்டித்தனமாக கச்சிதமாக தமிழர் தரப்பு அரசியல் அரங்கை சிதறடித்து வெற்றி கண்டுள்ளார். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிளக்கப்பட்டது. தமிழரசின் சுமந்திரனை அரசியலில் சில்லறையாக்கி செல்லாக் காசாக்கினார். வன்னியில் ரகசியமாக கரும்புத் தோட்டம் அமைக்க வேண்டுகோள் விடுத்த ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனை காட்டிக் கொடுத்தார். சம்பந்தனின் பதவி பறிப்பு முயற்சியின் பின்னாலும் இவருக்குப் பங்குண்டோ தெரியாது.

இறுதியாக, தம்மை அரவணைத்த இரண்டு விக்னேஸ்வரன்களையும் நம்ப வைத்துக் கழுத்தறுத்தார். இவர்கள் முன்வைத்த மாகாண சபை ஆலோசனைச் சபைகளை அமைக்கும் யோசனையை ஏற்றதாகக் கூறியவர் பின்னர் அதனை மறந்தேவிட்டார். அதனால் இப்போது ரணிலை மோசமாக விமர்சிப்பவராக முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மாறியுள்ளார்.

இந்தப் பின்னணியில் பார்க்கையில் வரவு செலவுத் திட்ட யோசனைகள் ஏட்டுச் சுரைக்காய்கள்தான். 1965 முதல் ஐந்து வருடங்கள் பிரதமராகவிருந்த டட்லி சேனநாயக்க தமது ஐந்து வரவு செலவுத் திட்டத்திலும் தமிழருக்கென ஒரு பல்கலைக்கழகம் அமைக்க நிதி ஒதுக்கி வந்தார். தமிழரசு - தமிழ்க் காங்கிரஸ் ஒற்றுமையின்மையை காரணமாக வைத்து அந்தப் பல்கலைக்கழக உருவாக்கத்தை காணாமலாக்கினார். இந்தப் பாதையையே ரணில் பின்பற்றுவார் போலத் தெரிகிறது.

இவர் இந்த வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிக்க எதிர்க்கட்சியினருக்கு அரிய சந்தர்ப்பம் என்று அழைப்பு விடுத்துள்ளார் மகிந்தவின் புதல்வரான நாமல் ராஜபக்ச. ஆனால், ராஜபக்ச சகோதரர்கள் நாமலின் விருப்புக்கு உடன்படமாட்டார்கள் என்பது சஜித்துக்கு நன்கு தெரியும். வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுமானால், அரசியலமைப்புச் சட்டப்படி நாடாளுமன்றம் கலைக்கப்படும் (இதனை இரண்டு வாரங்களுக்கு முன்னைய பத்தியிலும் குறிப்பிட்டிருந்தேன்).

இவ்வாறு நாடாளுமன்றம் கலைக்கப்படுவதை இரு தரப்பிலும் தற்போது எம்.பிக்களாக இருக்கும் பலர் விரும்பமாட்டார்கள். முழுமையாக ஐந்து ஆண்டுகளை பூர்த்தி செய்யாதவர்கள் பென்சன் பெறும் தகுதியை இழப்பர். மீண்டும் தேர்தல் நடைபெறும்போது வெற்றி பெறத் தவறின் எம்.பி. பதவியையும் இழக்க நேரிடும்.

மறுபுறத்தில், புதிய நாடாளுமன்ற தேர்தலை ரணில் எப்போது நடத்துவார் என்றும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. இதற்கு உதாரணமாக உள்ளூராட்சித் தேர்தலை காலவரையின்றி அவர் பின்போட்டதை நினைவில் கொள்ளலாம். இதனால் பெரமுன தரப்பினர் மட்டுமன்றி சஜித்தின் எதிர்க்கட்சித் தரப்பினரும் வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுவதை உள்ளூர விரும்பப் போவதில்லை.

மரத்தால் விழுந்தவரை மாடு ஏறி மிதிப்பது போன்று கோதபாய, மகிந்த, பசில் சகோதரர்கள் மீது உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அமைந்துள்ளது. நாட்டின் மோசமான பொருளாதார வீழ்ச்சிக்கு இவர்களும், இவர்களோடு இணைந்து செயற்பட்ட அதிகாரிகளும் காரணமென்று பெயர் சூட்டி அதிரடித் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியது.

இந்தத் தீர்ப்பை ஏற்கப் போவதில்லையென்று கண்டி தலதா மாளிகைக்குச் சென்றபோது மகிந்த கூறினாராயினும் உச்ச நீதிமன்ற தீர்ப்பு மாற்ற முடியாதது என்பது அவருக்குத் தெரியாததல்ல.

உச்ச நீதிமன்ற தீர்ப்பை முன்னிறுத்தி மூன்று ராஜபக்ச சகோதரர்களதும் சிவில் உரிமையை பறிக்க வேண்டுமென குரல் கொடுத்துள்ளார் சஜித் பிரேமதாச. இதனை பொதுவெளியில் காட்டிக் கொள்ள விரும்பாவிடினும் ரணிலின் விருப்பமும்கூட இதுவாக இருப்பதற்கு சாத்தியமுண்டு.

1980ல் ரணிலின் பெரிய தந்தை ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஜனாதிபதியாகவும், சஜித்தின் தந்தை ஆர்.பிரேமதாச பிரதமராகவும் இருந்தபோதுதான் சிறிமாவோ பண்டாரநாயக்க, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க, நிஹால் ஜெயவிக்கிரம ஆகியோரின் குடியுரிமைகள் பறிக்கப்பட்டு ஏழு ஆண்டுகளுக்கு அவர்கள் அரசியலில் ஈடுபடும் உரிமை மறுக்கப்பட்டது.

இப்போது பிரேமதாசவின் மகனின் வேண்டுகோளை ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பெறாமகன் ஏற்று ராஜபக்ச சகோதரர்களின் குடியுரிமையை ஏழாண்டுகளுக்குப் பறிக்க முன்வருவார்களாயின் என்ன நடைபெறும்?

பெரமுனவின் பெருந்தொகையான எம்.பிக்கள் ஷகப்பல் கவிழ எலிகள் பாய்வது; போன்று ரணில் பக்கத்துக்கு தாவக்கூடிய சாத்தியமுண்டு. பெரமுன எம்.பியான நிமல் லான்ச சுமார் அறுபது எம்.பிக்களுடன் இதற்குத் தயாராக உள்ளதாகவும், இவர்களின் ரகசியக் கூட்டமொன்று இந்த வாரம் இடம் பெற்றதாகவும் தெரியவந்துள்ளது.

சஜித் அணியிலிருந்தும் கணிசமானோர் ரணில் பக்கம் சேரக்கூடுமென்ற வதந்தி பல மாதங்களாக உலாவி வருகிறது. சஜித் அணியைச் சேர்ந்த ஹரின் பெர்னான்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோர் ரணிலுடன் சேர்ந்து அமைச்சர் பதவியை பெற்றனர். மைத்திரிபால சிறிசேனவின் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிலரும் அமைச்சர்களாயினர். ஜனாதிபதி தெரிவின்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் எம்.பிக்கள் சிலர் தமக்கு வாக்களித்ததாக ரணில் கூறியதும் ஞாபகமிருக்கலாம்.


இதனூடாக அறிய முடிவது என்ன? இப்போதுள்ள எம்.பிக்கள் பலரும் கொள்கைவாதிகள் அல்லர். பதவிவாதிகள், சந்தர்ப்பவாதிகள். தொடர்ந்து அரசியல் பதவி வகிப்பதற்காக கட்சி மாறத் தயாரானவர்கள். 1952ல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவிலிருந்து இன்றுவரை அதுவே தொடர்கிறது.

நிகழ்கால அரசியல் சூழ்நிலையில் ரணிலின் வரவு செலவுத் திட்ட 'யோசனை' நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலென்ன, தோல்வி அடைந்தாலென்ன அவரின் ஜனாதிபதிப் பதவியை அது பாதிக்கப்போவதில்லை. அவரே தொடர்ந்து ஜனாதிபதியாக இருப்பார். அவர் விரும்பும் சிறிய தொகை அமைச்சர்களுடன் அடுத்த பொதுத் தேர்தல்வரை காபந்து அரசாங்கம் ஆட்சியை நடத்தும்.

ஒன்றுமட்டும் புரிந்து கொள்ள வேண்டும் - ரணிலின் நிறைவேற்ற முடியாத வரவு செலவுத் திட்ட யோசனை அவரது அடுத்த வருடத்துக்கான ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனம்.



**நிறைவேற்ற முடியாத வரவு செலவுத் திட்ட யோசனைகள் முன்வைக்கப்பட்ட சமவேளையில், கோதபாய-மகிந்த-பசில் சகோதரர்கள் மீது பொருளாதார குற்றம் சுமத்தி உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள அதிரடித் தீர்ப்பு, ரணிலின் கையில் வந்து வீழ்ந்துள்ள நாகாஸ்திரம். ஒவ்வொரு கட்சியும் தங்கள் எம்.பிக்களை பவுத்திரமாக காத்துக் கொண்டிருக்க வேண்டிய காலமிது.**







- மாலி

# மீண்டும் கமரொன் மீண்டும் 'குரல்' ஒலிக்குமா?

## அரசியலில் ஒரு புதுமை!

'பாராளுமன்றங்களின் மாதா' (Mother of Parliaments) - என்றோர் அடைமொழி பொதுவாக அரசியலில் அறியப்படுவது. இங்கிலாந்தின் வெஸ்ற்மின்ஸ்ரர் பாராளுமன்ற முறைமையைக் கொண்டதாக பல நாட்டு பாராளுமன்றங்கள் அமைந்ததில், பிரிட்டனின் பாராளுமன்றத்தை அவ்வாறு பாராளுமன்றங்களின் மாதாவாக கருதுவது வழக்காகியுள்ளது. அத்துடன், பிரிட்டிஷ் பாராளுமன்ற நடவடிக்கைகளினதும் அரசியலமைப்பு மரபுகளினதும் தொகுப்பாக விளங்கும் 'பாராளுமன்ற நடைமுறை' (Parliamentary Practice) என்ற நூல், பாராளுமன்ற நடவடிக்கைகளின் 'பைபிளா'கவும் பின்பற்றப்படுகிறது.

பிரிட்டிஷ் பாராளுமன்ற நூலகத்தில் இளம் உதவியாளர் ஒருவராகவிருந்த தோமஸ் ஏர்க்ஸ்கின் மே (Thomas Erskine May) என்பவர், இப் பாராளுமன்ற நடவடிக்கைகளைத் தொகுத்து, 1844இல் முதன்முதலாக ஒரு வெளியீட்டைக் கொணர்ந்ததில் அதன் பெறுமானம் மதிப்புற்றது. பின்னர், பிரிட்டிஷ் பாராளுமன்ற எழுதுவினைஞர் நாயகம் என்ற உயர் பதவியை அடைந்த அவர், மேற் சேர்க்கைகளுடன், தொடர்ந்து ஒன்பது பதிப்புகளை வெளியிட்டார். அவருக்குப் பின்னரும் அவரின் பெயருடனேயே தொடரும் 25ஆவது பதிப்பை இப்போது 'பாராளுமன்ற நடைமுறை' நூல் பெற்றிருக்கிறது. பாராளுமன்ற நடைமுறைகளில் ஒரு 'சிக்கல் நிவாரணி' யாகும் இந் நூல், 'ஏர்க்ஸ்கின் மே' என்றே இன்று எங்கும் மேற்கோளிடப்படுகிறது.

ஆனால், 'பாராளுமன்றங்களின் மாதா' என்ற பதம் உண்மையில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தையன்றி, பிரிட்டனைக் குறித்ததாகவே முதன்முதலில் பிரயோகப்படுத்தப்பட்டது. பிரிட்டிஷ் அரசியல்வாதியும் சீர்திருத்தவாதியுமான ஜோன் பிறைற் 1865இல் நிகழ்த்திய ஓர் உரையில், "பாராளுமன்றங்களின் மாதா இங்கிலாந்து" என்று குறிப்பிட்டார். அது, காலப்போக்கில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தைக் குறித்ததாக ஆகியிருக்கிறது. ஜோன் பிறைற் கூறியது இதுவல்லவெனினும், ஏர்க்ஸ்கின் மே இக்கூற்றுக்கு ஆதாரமாகிறார்.

ஆக, கடந்த வாரம் இந்த அன்னை பாராளுமன்றத்தில் 'மின்னாமல் முழங்காமல்' நிகழ்ந்த நிகழ்வொன்று, பாராளுமன்ற நடைமுறைகளில் இப்போதைய காலகட்டத்தில் முக்கிய ஓர் அவதானத்துக்குரியதாகிறது. முன்னர் பிரதமராகவிருந்த ஒருவர், சிறிதுகால இடைவெளியில் இப்போது வெளியுறவு அமைச்சராக பதவியேற்றிருக்கிறார். இவ்வழக்கு, பொதுவில் எங்கும் இல்லாததெனினும், பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கு இது புதிதானதாகவும் இல்லை.

1963-64 காலப்பகுதியில் கன்சர்வேட்டிவ் கட்சி பிரதமராகவிருந்த டக்ளஸ் -ஹோம், பின்னர் 1970-74 காலப்பகுதியில் வெளியுறவு அமைச்சராக பதவியிலிருந்தார். பிரதமராவதற்கு முன்னரும், 1960-63வரை வெளியுறவு அமைச்சராக இருந்தவர் அவர்.

இப்போது, 2010-16 காலப்பகுதியில் கன்சர்வேட்டிவ் கட்சி பிரதமராகவிருந்த டேவிட் கமரொன் கடந்த 13ஆம் திகதி வெளியுறவு அமைச்சராக பதவியேற்றார். அன்று காலையில்தான், ஓர் அதிர்ச்சித் தகவலாக தொலைக்காட்சிகளில் இச் செய்தி வெளியானது. ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் தொடர்ந்தும் அங்கம் வகிப்பது தொடர்பான சர்வசன வாக்கெடுப்பில் (2016), 'இணைந்திருப்பது ஐரோப்பாவில் பிரிட்டனின் பலம்' என்று, இணைப்புக்கு ஆதரவாக பிரச்சாரமிட்ட டேவிட் கமரொன், வாக்கெடுப்பு முடிவு அதற்கு மாறாக, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறவேண்டும் என்று அமைந்ததும், தனது பிரதமர் பதவியை இராஜிநாமா செய்து, அரசியலில் விலகியிருந்தார்.

"சில சமயங்களில் அரசியலில் விடயங்கள் நாம் காண்பதைவிட எளிதானவை. சிலவேளைகளில் பேச்சுவாக்கில் ஒருவரிடம் ஒருவர், 'நீ ஏன் இதைச் செய்யக்கூடாது' என்று கேட்கும்போது, அவர் 'சரி' என்று சொல்லிவிடுகிறார். இதற்கு இடைத் தரகர்கள் எவரும் வேண்டியதில்லை. தாங்களாகவே தீர்மானித்துக்கொள்கிறார்கள். அதுவே இங்கும் நடந்திருக்கிறது" என்கிறார் முன்னாள் வெளியுறவு அமைச்சரொருவரான வில்லியம் ஹேய்க்.

பொதுவாக, இத்தகைய விவகாரங்களில் செய்தி ஊடகங்களில் முன்னதாகவே ஹேஷ்யங்கள் - ஆரூடங்கள் வெளிப்பட்டுவிடும். ஆனால், அப்படி எதுவுமே இல்லை. பதவியேற்பின் பின்னர்தான், வில்லியம் ஹேய்க் இதன் சூத்திரதாரியாயிருப்பாரோ என்ற செய்தி ஊடகங்களின் ஊகத்துக்கு வில்லியம் ஹேய்க் தனது ஊகத்தைத் தெரிவித்திருக்கிறார்.

பிரதமர் ரிஷி சுனக்கின் அனைத்து நடவடிக்கைகளிலும் உடன்பாடானவர் அல்லர் டேவிட் கமரொன். எனினும், இடையிடையேயான பேச்சுக்கள் இருவரிடையேயும் அவ்வப்போது இருந்திருக்கின்றன. அந்நிலையில், பிரதமர் வாசஸ்தலத்தில் 'ஒரு முள்'ளாக, கடந்த வாரம் பிரிட்டிஷ் அரசியலைப் பரபரப்புக்குள்ளாக்கி, பதவி நீக்கப்பட்ட உள்விவகார அமைச்சர் சுவெலா பிரவெமன் விவகாரம் இதற்கு வழிசமைத்ததாக நம்பப்படுகிறது.

எனினும், இந்த இரகசியம் பேணப்பட்ட விதம், பிரிட்டிஷ் அரசியலில் எல்லா மட்டத்திலும் வியப்பையே ஏற்படுத்தியது. 'வைற்ஹோல்' என்று அழைக்கப்படும் அரசாங்க வட்டாரத்தில் இந்த இரகசியம் மிக அரிதான ஒன்றாக பேசப்படுகிறது.

காஸாவில் நடைபெறும் இஸ்ரேல் தாக்குதல்களுக்கு எதிரான பலஸ்தீன ஆதரவு ஊர்வலங்களில் பொலிசார் அவர்களுக்கு சார்பாக செயல்படுகிறார்கள் என்று பொலிஸ் படைக்கு பொறுப்பான அமைச்சரான சுவெலா பிரவெமன் 'சன்டே ரைம்ஸ்' பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் பகிரங்கமாக தெரிவித்த கருத்து பெரும் அரசியல் கொந்தளிப்பை ஏற்படுத்தி, அவரின் இராஜிநாமாவை வற்புறுத்தியதுடன், பிரதமர் ரிஷி சுனக்குக்கு பெரும் நெருக்குதலையும் ஏற்படுத்தியது.

அமைச்சரவை மாற்றமொன்றை ஏற்கனவே சிந்தித்துக்கொண்டிருந்த பிரதமர் சுனக், இந்த வேளையில் எதிர்பார்த்தோ எதிர்பாராமலோ, டேவிட் கமரொனுடன் மேற்கொண்ட வாத்சல்யமான பேச்சின்போது, வில்லியம் ஹேய்க் தெரிவிக்கும் விதமாகவேதான் இது பெரும்பாலும் தீர்மானமாகியிருக்கலாம்.

> "மார்ச் மாத முடிவில் விசாரணை ஒன்று முடியவில்லை என்றால், ஐ. நா. மனித உரிமைகள் சபையில் நான் எமது நிலைப்பாட்டைப் பயன்படுத்தி, ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் செயல்பட்டு முழுமையான, நம்பகமான, சுதந்திரமான சர்வதேச விசாரணை ஒன்றுக்கு அழைப்பு விடுப்பேன் என்பதை மிகத் தெளிவாக கூறிவைக்கிறேன்"



ஆனால், முதல்நாள் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, முதலாம் உலகப் போரில் உயிரிழந்த படைவீரர்களுக்கான நினைவு வைபவத்தில் பிரிட்டிஷ் பிரதமர்களாக, அருகருகே நின்று அஞ்சலி செலுத்திய இவர்கள் இருவரும் மறுநாள் வெடிக்கவைக்கத் திட்டமிட்டிருந்த 'குண்டை' எவரும் அறியவில்லை.

"ஏழு ஆண்டுகளாக அரசியல் முன்னரங்கில் நான் இல்லாவிட்டாலும், பதினோராண்டுகள் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவராகவும், ஆறு ஆண்டுகள் பிரதமராகவும் இருந்த எனது அனுபவம், பிரதமர் ரிஷி சுனக் முக்கியமான சவால்களை எதிர்கொள்ளும் இவ் வேளையில், அவருக்கு நான் உதவுவதில் துணையாகும்" என்று, பதவியேற்பின் பின்னர் டேவிட் கமரொன் தெரிவித்தார்.



பாராளுமன்ற உறுப்பினர் அல்லாத டேவிட் கமரொன், பிரபுக்கள் சபை அங்கத்தவராக்கப்பட்டு, பிரபுக்கள் சபையிலிருந்து இந்த அமைச்சர் பதவியை வகிக்கிறார்.

டேவிட் கமரொன் வெளியுறவு அமைச்சராக பதவியேற்ற அதே தினம் மாலை, லண்டனின் மேயர் பிரபு (Lord Mayor) விருந்துபசாரத்தில் 'வெளியுறவு கொள்கை' பற்றி உரையாற்றிய பிரதமர் சுனக், "வெளிநாட்டு நெருக்கடிகள், உள்நாட்டில் பிளவுகளை உருவாக்குகின்றன" என்று குறிப்பிட்டார்.

ஆக, இந்த நெருக்கடிகளையும் பிளவுகளையும் சமாளிப்பதிலும், இவற்றுக்கு தீர்வு காண்பதிலும் பிரதமருக்கு புதிய வெளியுறவு அமைச்சர் டேவிட் கமரொன் எப்படி துணையாகப்போகிறார்? முதல் விவகாரமாக, யுத்த முனையொன்றாகும் உக்ரைன் தலைநகருக்கு அவர் சென்றார்.

இதேவேளை, இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இலங்கை அரசின் நடவடிக்கைகள் தொடர்பில் சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு கடுமையான குரல் கொடுத்த முதல் வெளிநாட்டு தலைவரான டேவிட் கமரொன், இந்த விவகாரத்திலும் தனது அதே குரலை வெளிப்படுத்துவாரா?

கொழும்பில் 2013 நவம்பரில் நடைபெற்ற பொதுநலநாடுநாடுகள் உச்சி மாநாட்டை, இலங்கை அரசுக்கு பெரும் கலக்கமாக ஆக்கியவர் டேவிட் கமரொன். இறுதி யுத்தத்தின்போதான மனித உரிமை மீறல்களுக்காக இலங்கை அரசின் பொறுப்புக்கூறலுக்கும், போர்க்குற்ற விசாரணைக்கும் அம் மாநாட்டு வேளையில் அவர் வற்புறுத்தி மேற்கொண்ட செயல்பாடுகள், இது தொடர்பில் மாநாட்டை திசைதிருப்பியே இருந்தன.

'டேவிட் கமரொன் இந்த விடயத்துக்காக இங்கு அழைக்கப்படவில்லை' என்று தெரிவித்து, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான தனித்த அவரின் சந்திப்புக்கு கடைசிவரை சம்மதம் தெரிவிக்கப்படாமலேயே இருந்தது.

"இலங்கையை பிரிட்டனின் காலனித்துவ நாடு என்று நினைக்க வேண்டாம்" என்று, தகவல் தொடர்பு அமைச்சர் கெகலிய ரம்புக்வெல கடும் தொனியில் கர்ஜித்தார்.

இந்த விடயத்தில், டேவிட் கமரொன் 'கங்கணம் கட்டிய' ஒருவராகவே லண்டனிலிருந்து புறப்பட்டார். இலங்கை இராணுவத்தின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து இந்தியா, கனடா, மொறிசியஸ் நாட்டு பிரதமர்கள் மாநாட்டை பகிஷ்கரித்தார்கள். 53 அங்கத்துவ நாடுகளைக்கொண்ட பொதுநல நாடுகள் அமைப்பின் 37 நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்வார்கள் என இலங்கை எதிர்பார்த்த நிலையில், 27 நாடுகளே கலந்துகொண்டன. அமைப்பின் தலைவியான எலிஸபெத் மகாராணிக்கு பதிலாக, இளவரசர் சார்ள்ஸ் கலந்துகொண்டார்.

பிரிட்டிஷ் பிரதமரும் மாநாட்டில் கலந்துகொள்ளாமல், அதனைப் பகிஷ்கரித்து பிரிட்டனின் கண்டனத்தைத் தெரிவிக்கவேண்டும் என்றே எதிர்க்கட்சியான தொழிற் கட்சியின் தலைவர் எட் மிலிபான்டும் சில லண்டன் தமிழ் அமைப்புக்களும் வற்புறுத்தியபோதும், 'தமிழர்களின் உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் நாம் அக்கறை கொண்டிருந்தால், அதனை அங்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

# வரவு - செலவு திட்டம் - 2024: ரணில்கூறுவது போல நாட்டை மீட்டெடுக்குமா?

கந்தையா அருந்தவபாலன்

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவி னால் சமர்ப்பிக்கப்பட்ட அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பான விவாதம் பாராளுமன்றத்தில் தற்போது நடைபெற்று வருகிறது. கடந்த13ஆம் திகதி குறித்த வரவுசெலவுத் திட்டத்தைச் சபையில் சமர்ப்பித்து உரையாற்றும் போது அவர்அத்திட்டத்திற்கு நாட்டை மீட்டெடுப்பதற்கான (Recovering) திட்டம் என்ற ஒரு மகுடத்தைச் சூட்டியிருந்தார். அதாவது கையறு நிலைக்குச் சென்றுவிட்ட நாட்டின் பொருளாதாரத்தை மீட்டுஅதன்மூலம் நாட்டு மக்களின் வாழ்வை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கான ஒரு திட்டமென அவர் குறிப்பிட்டிருந்தார். ரணில் கூறுவது போல நாட்டை மீட்டெடுப்பதற்கான முன்மொழிவுகள் அத்திட்டத்தில் இருக்கின்றனவா? இருப்பின் அவை எவ்வாறு நாட்டை மீட்டெடுக்க உதவும்? அவை சாத்தியப்படுவதற்கான வாய்ப்புகள் எவ்வாறு அமைந்துள்ளன? என்பது போன்ற வினாக்களுக்கு விடை தேடுவதன் மூலம் குறித்த வரவு செலவுத் திட்டத்தின் விளைவுகளை எதிர்வு கூறக்கூடியதாக இருக்கும்.

இலங்கையில் அண்மைக் காலங்களில் சமர்ப்பிக்கப்படும் வரவுசெலவுத் திட்டங்கள் அவற்றின் அடிப்படையான இயல்பு நிலையிலிருந்து விலகி சம்பிரதாயச் சடங்கு என்ற நிலைக்கு வந்து பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. வரவு செலவுத் திட்டத்தின் மூலம் கொண்டு வர வேண்டிய பல முக்கியமான விடயங்கள் இன்று அத்திட்டத்திற்கு முன்னும் பின்னும் அறிவிக்கப்படுவதுடன்அத்திட்டத்திற்கமைவாக செயற்படும் போக்கும் அருகி வருகிறது. அத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு வரவுசெலவுத் திட்டத்தின் நிறைவேற்றம் தொடர்பான ஆண்டிறுதி மதிப்பீடுகள் குறைந்து விட்டதுடன் அவற்றுக்கான பொறுப்புக் கூறலும் இல்லாமல் போய்விட்டது. இதனால் இன்று ஆளுங்கட்சிக்கு அது ஒரு சம்பிரதாயச்சடங்கு, எதிர்க்கட்சிகளுக்கு அது அரசியல் செய்வதற்கான ஒரு கருவி, மக்களுக்கு அது ஒரு செய்தி என்ற நிலைக்குச் சுருக்கிவிட்டது என்பதுதான் யதார்த்தம். இந்த யதார்த்த நிலையைப் பின்புலமாகக் கொண்டே நாம் குறித்த வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளை ஆராயவேண்டும்.

ரணில் தனது வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளில் மூன்று முக்கிய விடயங்களுக்கிடையில் சமரசம் காண முயன்றிருப்பதைக் காணமுடியும். ஒன்றுநாட்டின் பலவீனமான பொருளாதார இயலுமை. இரண்டாவது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளும் அதுதரும் இரண்டாம் தவணைக் கடனுக்கான எதிர்பார்ப்பும். மூன்றாவது அடுத்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் தேர்தல். அதாவது ரணிலின் ஒரு காலில் பலவீனமான பொருளாதாரமும் மறுகாலில் நாணயநிதியத்தின் நிபந்தனைகளும் விலங்கிட்டிருக்கும் ஒரு நிலையில் தேர்தலில் கனி பறிக்க ஆசைப்படுவதை முன்மொழிவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. வரவு செலவுத் திட்டமென்பது வெறுமனே ஒரு கணக்கறிக்கையோ அன்றி வெறும் முன்மொழிவுகளோ அல்ல. அதுநாட்டின் ஒட்டுமொத்த முன்னேற்றத்துக்கான நிதி முகாமைத்தவக்கூற்று. நிதியற்ற திட்ட முன்மொழிவுகளும் தவறான திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளும் பயனற்றன. ரணிலின்திட்டத்தில் ஹம்பாத்தோட்ட துறைமுகம், மத்தள வானூர்தி நிலையம் போன்ற தவறான திட்ட ஒதுக்கீடுகள் எவையும் இல்லை எனினும் நிதி ஒதுக்கப்படாத, வழிகூறப்படாத திட்ட



முன்மொழிவுகள் பலவுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை தேர்தலுக்கான வாக்குறுதிகளகவே கொள்ளப்பட வேண்டும். அதேவேளை முன்மொழியப்பட்ட பெரும்பாலான திட்டங்களில் துருத்திக் கொண்டு இரண்டு விடயங்கள் நிற்பதைக் காணமுடியும். ஒன்று அரச தொழில் முயற்சிகளை முழுமையாக அல்லது பகுதியாக தனியார்மயப்படுத்துவது. இரண்டாவது வெளிநாட்டு, உள்நாட்டு தனியார் முதலீடுகளை ஊக்குவிப்பது.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் நன்கொடைகள் உட்பட மொத்த வரவு **4127** பில்லியன் ரூபாவாகவும் மொத்தச் செலவு **6878** பில்லியன் ரூபாவாகவும் மதிப்பிடப்பட்டிருப்பதால் பற்றாக்குறை **2851** பில்லியன் ரூபாவாக உள்ளது. **2023** ஆம் ஆண்டை விட **2024**ஆம்ஆண்டுக்கான அரசின் செலவு **33** வீதம் உயர்வானதாகும். அரசின் செலவில் **35**வீதம் அரச பணியாளர்க்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக உள்ளது. அரசின் செலவு அதிகரிப்புக்கு அரச பணியாளர்கள், ஓய்வு ஊதியகாரர் போன்றோருக்கான வாழ்க்கைச் செலவுப்படி அதிகரிப்பு, அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவு அதிகரிப்பு, அரச வங்கிகளுக்கான **450** பில்லியன் ரூபா மூலதனக் கொடுப்பனவு ஆகியவற்றுடன் அதிகரித்த விலை மட்டங்களும் பிரதான காரணிகளாக அமைகின்றன. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்த வரவு **19** வீதம் ஆகவும் மொத்தச்செலவு **10** வீதம் ஆகவும் பற்றாக்குறை **9** வீதம் ஆகவும் அண்ணளவாக உள்ளன. **2023**இலும் பற்றாக்குறை **9** வீதம் (மீள்கணிப்பு **8.5** வீதம் ஆகவே இருந்தது. மறுபுறத்தில் அரச தொழில் முயற்சிகள் பெருமளவு நட்டத்தில் இயங்குவதால் வருமானத்துக்குப் பதிலாக அவை அரசின் செலவைக் கூட்டுவதால் அரசு தனது வருமானத்திற்கு வரிகளிலேயே, குறிப்பாக மூன்று வகையான வரிகளிலேயே அதிகம் தங்கியுள்ளது. மொத்த அரச வரவான **4127** பில்லியன் ரூபாவில் **3820** பில்லியன் வரி வருமானமாகும். இதில் வருமானவரி **1080** பில்லியன், பெறு மதிசேர் வரி (VAT) **2235** பில்லியன், இறக்குமதி வரி **505** பில்லியன் ரூபாக்களாகும். **2023**ஆம் ஆண்டிலிருந்ததைவிட **2024** இல் சுமார் **47** வீதத்தால் வரிவருமானத்தை அதிக ரிப்பதற்கு திட்டமிடப்படுள்ளது. இதேவேளை வரவு செலவுத் திட்டப் பற்றாக் குறையான **2851** பில்லியன் ரூபாவை எவ்வாறு அரசாங்கம் திரட் டிக்கொள்ளப் போகிறது என்பதற்கு உறுதியான முன்மொழிவுகள் எவையும்இல்லை.

நாட்டை மீட்டெடுக்க வேண்டுமானால் பொருளாதார வளரச்சியைத் தூண்டுதல், விலை மட்டத்தைக் கட்டுப்படுத்தல், ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியை உறுதிப்படுத்தல், அதிகரித்துவரும் வறுமையைக் குறைத்தல், அரச நலன்புரித்துறைகளை மேம்படுத்துதல் போன்றவற்றில் முறையான திட்டமிடல், நிதி ஒதுக்கீடுகள், ஊக்குவிப்புகள் அவசியமாகின்றன. நீண்டகாலமாகப் பின்பற்றப்பட்டு வந்த தவறான பொருளாதாரக் கொள்கைகள்,கொரோனா பெருந்தொற்று, அரசியல் குழப்பம், கையறுநிலை போன்றவற்றினால் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி கடந்த சில ஆண்டுகளில் மறைப் பெறுமானத்தைத் தொட்டதனால் முதலீடு, வருமானம், வேலைவாய்ப்பு, ஏற்றுமதி, மக்க

> **மேலெழுந்தவாரியான திட்டங்களாலோ மாற்றங்களாலோ நாட்டை மீட்டெடுக்க முடியாது. முழுமையான அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றத்தினாலும் முன்னேற்றமான அரசியல் பண்பாட்டினாலும் மட்டுமே நாட்டைவிரைவில் மீட்டெடுக்க முடியும்.**

ளின் வாழ்க்கைத் தரம் போன்றவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. **2024**ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதார வளரச்சி **3.3** வீதமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதார வளர்ச்சியை துரிதப் படுத்துவதற்கு அதிகரித்த பொது முதலீடுகளை அதிகரித்தல் மற்றும் தனியார் துறையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளுடன் நாட்டில் பொருளாதார, அசியல் உறுதிப்பாடும் அவசியமாகின்றன. இந்த வரவு செலவுத் திட்டத்தில் முதலீட்டுக்கான நிதியொதுக்கீடு குறைந்த மட்டத்திலேயே உள்ளது. மொத்த அரச செலவில் **18** வீதம் மட்டுமே முதலீட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஏலவே கல்வி, சுகாதாரம், பொதுப் போக்குவரத்து போன்ற அரச நலன்புரித் துறைகளினை பேணுவதற்குப் பெருந்தொகை முதலீடுகள் தேவைப்படும் ஒரு சூழ்நிலையில் இத்தொகையினால் படுத்துவிட்ட பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த முடியுமா என்ற கேள்வி எழுகின்றது. மறுபுறத்தில் தனியார் துறையை ஊக்குவிப்பதற்கான சில திட்டங்கள் மற்றும் கட்டமைப்புக்களுக்கான முன்மொழிவுகள் காணப்பட்டாலும் ஓர் உறுதியற்ற அரசியல், பொருளாதார நிலையில் அவற்றினால் விரைவான நன்மை பெறமுடியுமா என்பதுவும் கேள்விக்குறியே. கடன்களுக்கு உயர்வான வட்டிவீதங்கள், இறக்குமதிக் கட்டுப்பாடுகள், அதிகரித்த உற்பத்திச் செலவு, வாழ்க்கைச் செலவு உயர்வினால் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புகளின் மட்டுப்பாடு போன்றன நிலவும் ஒரு சூழ்நிலையில் ஏற்கனவே நலிந்துவிட்ட தனியார் துறையை மேம்படுத்துவதற்கு குறிப்பிட்ட முன்மொழிவுகள் போதுமானவ அல்ல. இதனால் எதிர்பார்க்கப்படும் குறைந்த மட்ட பொருளாதார வளர்ச்சியைக்கூட நாடு எட்டுமா என்பதும் கேள்விக்குறியே.

இந்த வரவு செலவுத் திட்டத்தின் விளைவு தொடர்பில் வரி அறவீடுகள் முக்கியம் பெறுகின்றன. திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பாகவே வரி தொடர்பான அறிவித்தல்களும் நடைமுறைகளும் வந்துவிட்டன. திட்டமிட்டபடி **2024** இல் வரி வருமானத்தை **47** வீதத்தால் உயர்த்துவதற்கு முடியுமா என்ற ஐயத்தை ஆய்வாளர்கள் எழுப்பும் அதேவேளை ஏற்கனவே வருமான வரிக்கான கீழ்மட்ட எல்லை ஒரு இலட்சம் ரூபாவாக குறைக்கப்பட்டதுடன் வரி வீதங்களும் மேல் நோக்கி மாற்றப்பட்டதால் நாட்டில் ஒருபிரிவினரான தொழில் வாண்மையாளர் அதிருப்திக்கு உள்ளாகியுள்ளதுடன் அவர்களின் புலப்பெயர்வும் போராட்டங்களும் அதிகரித்த வண்ணம் உள்ளன. இதைவிட விஏரி வரி **15** இலிருந்து **18** வீதமாக உயர்த்தப்படுவதால் நாட்டு மக்கள் அனைவருமே பாதிப்படையும் நிலைமை தோன்றும். குறித்த வரி பொருட்கள், சேவைகளின் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் மீது விதிக்கப்படும் ஒன்றாகையால் பரந்த அளவிலான விலைமட்ட அதிகரிப்புக்கு வழிவகுக்கும். அதே வேளை ஏற்கனவே சிலதுறைகளுக்கு வழங்கப்பட்ட விஏரி வரிச்சலுகை நீக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் முக்கியம் பெறுகின்றன. இவற்றுடன் எரிபொருட்கள், மின்சாரம் போன்றவற்றுக்கு வழங்கப்பட்டு வரும் இவ்வரிச் சலுகை நீக்கம் பற்றி தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. அவற்றுக்கும் நீக்கப்படுமாயின் தற்போது ஒற்றை இலக்கத்தை அடைந்துள்ள பணவீக்க வீதத்தில் செங்குத்தான அதிகரிப்பு வேகமாக ஏற்படும். அதேவேளை திட்டமிட்டபடி அரச பணியாளர்க்கான கொடுப்பனவும் வழங்கப்படுமானால் அதன்மூலமும் பணவீக்கம் தூண்டப்படும். மேலும் அரசு பெறக்கூடிய கடன் எல்லை **3.45** ரில்லியனிலிருந்து **7.35** ரில்லியனுக்கு உயர்த்தப்பட்டதையும் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிரப்புவதற்கான வழிகள் கூறப்படாததையும் இணைத்து நோக்கினால் வெளிநாட்டுக் கடனைஅடைப்பதற்கான பாதை மூடப்பட்டுள்ள ஒரு நிலையில் உள்நாட்டுக் கடன்கள் மூலமே அது நிரப்பப்படும் என்பதை ஊகிக்க முடியும். இது மேலும் பணவீக்கத்துக்கு வழி வகுக்கும்.

நாடு எதிர்நோக்கியுள்ள இன்னொரு முக்கிய பிரச்சினை வெளிநாட்டு நாணயக் கையிருப்பின்மையும் நாணய மாற்று விகிதத் தளம்பலும். இவை வெளிநாட்டு நாணயத்தின் உள்நோக்கிய பாய்ச்சலில் தங்கியுள்ளன. ஏற்றுமதி, உல்லாசப் பயணிகள் வருகை, வெளிநாட்டு முதலீடுகள், புலம்பெயர்ந்தோரின் பண அனுப்புதல் போன்ற பல துறைகளின் வளரச்சியின் மூலமே இதனை அதிகரிக்க முடியும். உல்லாசப் பயணம், வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்தல் தொடர்பான ஒரு சில முன்மொழிவுகள் இருந்தாலும் முக்கிய மூலமான ஏற்றுமதியினை விரிவுபடுத்தவது தொடர்பான உறுதியான ஏற்பாடுகள் எதுவும் இல்லை. இதுதொடர்பாக ரணிலின்

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஜக்கியம் இல்லையேல் எதுவுமிருக்காது:

## வட- கிழக்கு சிவில் சமூகம் எடுத்துரைப்பு!

யாழ்ப்பாணம்,நவ.19

அரசியல் கட்சிகளின் ஒற்றுமையை வலியுறுத்தி, வடக்கு கிழக்கு சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில்,தந்தை செல்வா நினைவு மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் பங்கு கொண்டிருந்தனர். நீண்ட இடைவெளிக்கு பின்னர், மாறுபட்ட அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒரு சந்திப்பில் பங்குகொண்ட சந்தர்ப்பமாக அமைந்திருந்தது.

பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளையின் தலைமையில் இடம்பெற்ற, மேற்படி கூட்டத்தில், அரசியல் ஆய்வாளர்கள் யதீந்திரா, நிலாந்தன், தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் தனபாலசிங்கம் ஆகியோர் உரையாற்றிருந்தனர். தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் செய்ய வேண்டியது என்ன - என்னும் கேள்வி கேட்கக் கூடிய சூழல் இருக்கின்றதென்றால், கடந்த பதின் நான்கு வருடங்களில் எதையும் நம்மால் அடைய முடியவில்லை என்பதுதான் அடிப்படையான விடயமாகும். இந்த பின்புலத் திலிருந்துதான் தமிழ் கட்சிகளை நோக்கி ஒற்றுமைப்படுங்கள் என்னும் கோரிக்கையை நாம் முன்வைக்க வேண்டியிருக்கின்றது. யுத்தம் முடிவுற்ற போது, தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே இருந்தது. ஆனால் இப்போது பல கட்சிகள் இருக்கின்றன. இந்த விடங்களை அரசியல் ஆய்வாளர் யதீந்திரா சுட்டிக் காட்டியிருந்தார்.





தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் ஓரணியாக வேண்டிய காலத்தின் கட்டாயம். ஜக்கியம் இல்லையேல் எதுவும் இருக்காது, இவ்வாறு அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் குறிப்பிட்டார். தமிழ் கட்சிகளின் ஜக்கியம் தேசத்தை கட்டியெழுப்புவதாக அமைய வேண்டும் மாறாக, வெறும் தேர்தல் இலக்கை அடிப்படையாகக் கொண்டதாக அமையக் கூடாது. தேர்தல் இந்த இலக்கின் ஒரு பகுதியாக அமைந்திருக்க வேண்டும்.

தமிழ் கட்சிகள் அனைத்துக்கும் கடந்தகால அனுபவங்கள் உண்டு, கட்சிகளுக்கு மட்டுமல்ல, புத்திஜீவிகள் - ஏன் பொது மக்களுக்கும் அனுபவமுண்டு. ஆனால் கடந்த கால அனுபங்களிலிருந்து, எவருமே எதையும் கற்றுக் கொள்ளவில்லை. நிலைமைகள் பெரியளவில் மாறிவிட்டன. முன்னர் அரசியலை நோக்கியது போன்று இப்போது பார்க்க முடியாது. இவ்வாறு தனபாலசிங்கம் குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கு சிவில் சமூகம் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் தனியான கலந்துரையாடல்களை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் ஈழநாட்டிற்கு தெரிவித்தனர்.



---



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

## வியுக்தியார் பதில்கள்

**ஆர். புஸ்பகாந்த்,**
**2வது ஒழுங்கை, தெகிவளை.**

**கேள்வி:** : : நாட்டின் முறையற்ற பொருளாதார முகாமைத் துவத்துக்கும், சீரற்ற நிதி நிர்வாகத்துக்கும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் பொறுப்பு கூற வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதே?.

**வியுக்தியார்:** நீதிமன்றம் அவர்கள் பொறுப்புக்கூற வேண்டும் என்றுதான் தீர்ப்பளித்திருக்கின்றது. அவர்கள்தான் அதற்கு பொறுப்புக்கூறும் வகையில் ஏற்கனவே தமது பதவிகளை துறந்து விட்டார்களே. நாட்டில் புரையோடிப்போன இனப்பிரச்சினை போன்ற பிரச்னைகளுக்கு தீர்வுகாணாததால்தான் நாடு இப்படி ஆனது என்று நாம் இனி சொல்ல முடியாதவாறு நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது அவ்வளவுதான்.

---

**கே. ராம்குமார்,**
**பிள்ளையார் கோவிலடி, தெல்லிப்பளை.**

**கேள்வி:** : இந்த நாட்டில் கிரிக்கெட் விளையாட்டை மீண்டும் வெற்றிப்பாதைக்கு கொண்டுவர விரும்புவதாகவும், வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதா ரத்தை மீளக் கட்டியெ ழுப்ப முடியுமாக இருந்தால் கிரிக்கெட்டையும் மீளக் கட்டியெழுப்ப முடியும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளாரே. அவரால் அது முடியும் என்று நீங்கள் நம்புகின்றீர்களா?

**வியுக்தியார்:** அவர்தான் தெளிவாகச் சொல்லிவிட்டாரே. பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப முடியுமானால், கிரிக்கெட்டையும் மீளக்கட்டியெழுப்ப முடியும் என்று. இரண்டுமே இந்த நாட்டில் ஊழலால்தான் வீழ்ச்சியடைந்தன. அவர் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப ஐஎம்எவ் ஐ மாத்திரம் நம்பிக்கொண்டிருக்கிறார். ஆனால் ஊழலை ஒழிக்காதவரை அது சாத்தியமில்லை என்பதுபோல, கிரிக்கெட்டையும் மீட்கமுடியாது என்று சொல்லாமல் சொல்லியிருக்கிறார் என்றுதான் நினைக்கின்றேன்.

---

**சிவபாலன் செந்துஜன்,**
**கதிரேசு வீதி, வவுனியா.**

**கேள்வி:** வடக்கு-கிழக்கில் வீடற்ற குடும்பங்களின் மீள்குடியேற்றத்திற்காக 2,000 மில்லியன் ரூபாவும், யாழ்ப்பாணத்தில் நிலவும் தண்ணீர் பிரச்னைக்கு தீர்வை வழங்குவதற்கான அடிப்படைப் பணிகளுக்காக 250 மில்லியன் ரூபாவும், காணாமல்போனவ்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக 1500 மில்லியன் ருபாவையும் ஜனாதிபதி புதிய பட்ஜட்டில் ஒதுக்கியிருக்கிறாரே?.

**வியுக்தியார்:** அவர் பணத்தை ஒதுக்கினாலும், எப்படியான வீடுகளை அமைப்பது என்பதில் நம்மவர்கள் ஆளாளுக்கு வெவ்வேறு யோசனைகளைச் சொல்லி எந்த ஒரு வீடும் கட்டப்படுவதை தடுத்துவிடுவார்கள் என்பது அவருக்குத் தெரிந்ததுதானே. அதுதான் அவர் அப்படி தாராளமாக ஒதுக்கியிருக்கிறாரோ தெரியவில்லை. அது சரி, கடந்த ஆண்டு அவர் தனது பட்ஜட்டில் உள்ளூராட்சி தேர்தல்களை நடாத்துவதற்காகவும் நிதி ஒதுக்கியிருந்தாரே. ஆனால் தேர்தல் நடாத்த பணம் இல்லை என்று அதனை நடத்தாமல் விட்டது ஞாபகம் இல்லையா உங்களுக்கு?. அதுபோலத்தான் வடக்கு கிழக்கு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கினாரோ தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்.

---

**ப. அபிஷேக்குமார்,**
**எல்லை வீதி, மட்டக்களப்பு.**

**கேள்வி:** மட்டக்களப்பு - மயிலத்தமடு மாதவனை பகுதியில் மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அரச காணியில் அத்துமீறி குடியேறியதாக தெரிவித்து 13 பேருக்கு எதிராக ஏறாவூர் நீதிமன்றில் மகாவலி அதிகார சபையினால் கடந்த மாதம் 22 ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் அவர்களை வெளியேற்றுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதே. அவர்கள் வெளியேறுவார்கள் என்று நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:** நீதிமன்றத்தால் உத்தரவு மாத்திரமே வழங்கமுடியும். ஆனால் அவர்கள் வெளியேறாது விட்டால், அவங்களை வெளியேற்றவேண்டியது பொலிசார்தானே. அதனை அவர்கள் செய்வார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். இப்படித்தானே முல்லைத்திவில் குருந்துார்மலையில் விகாரை கட்டக்கூடாது என்று நீதிமன்றம் உத்தவிட்டபோதிலும் விகாரையை கட்டினார்களே.

---

**அ. சிவகணேஸ்,**
**சங்கரத்தை, வட்டுக்கோட்டை.**

**கேள்வி:** வரவு செலவுத் திட்டத்தில் 2024 ஆம் ஆண்டில் அரச வருமானம் 4,172 பில்லியன் ரூபாவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் 2024 ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் மொத்த செலவீனம் 6,978 பில்லியன் ரூபாவாகும்.

இதன்படி வரவு செலவு திட்ட பற்றாக்குறை (துண்டு விழும் தொகை) 2,851 பில்லியன் ரூபாவாகும். அப்படியெனில் இந்த துண்டுவிம் தொகையை அரசாங்கம் எங்கிருந்து பெறப்போகின்றது?

**வியுக்தியார்:** அட நீங்கள் வேறு. இதுவரை காலமும் ஒவ்வொரு பட்ஜெட்டிலும் இப்படி பல ஆயிரம் பில்லியன் ரூபாய்கள் துண்டுவிழுந்துகொண்டுதான் இருக்கின்றன. அதனால்தான் இதனை சமாளிக்க கடன்கடனாக பெற்று நாடு கடன்சுமையில் தவிக்கின்றது. ஆனால் ரணில் ஆட்சிக்கு வந்த பின்னர் கடந்த வருடமும் செலவுக்காக ஒதுக்கிய தொகையை செலவுசெய்யவே இல்லையே. அதனால் கடன்பெறவேண்டி வரவில்லை. அடுத்தவருடமும் அப்படித்தான், திட்டங்களுக்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கின்றதே தவிர செலவு செய்யாமல் விட்டால் துண்டுவிழும் தொகை இல்லாமல் போய்விடும்தானே.

# பாகிஸ்தானில் கடும் பொருளாதார வீழ்ச்சி: ஆப்கான் அகதிகள் கட்டாய வெளியேற்றம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

1979 இல் ஆப்கானிஸ்தானை ரஷ்யா ஆக்கிரமித்ததில் இருந்து 1989 வரை அமெரிக்க உதவியுடன் ரஷ்யாவை எதிர்த்து போரிட்டு வந்தது. அதன்பின் தலிபான் ஆட்சியின் கொடூரங்களை உலகறியும்.

பல வருடங்கள் நடைபெற்ற இந்த போரின் விளைவாக பொருளாதாரம் சீர்குலைந்து அந்நாட்டில் வேலைவாய்ப்புகள் குறைந்ததால், வாழ்வாதார காரணங்களுக்காக அங்கிருந்து பலர் வெளியேறி பாகிஸ்தானில் அகதிகளாக தஞ்சம் புகுந்தனர்.

அமெரிக்கா விலகிய பின்னர் கடந்த 2021இல் ஆப்கானிஸ்தானில் தலிபான் அமைப்பினர் ஆட்சியை மீண்டும் கைப்பற்றினர். இதனைத் தொடர்ந்து மேலும் பலர் அந்நாட்டிலிருந்து அண்டை நாடான பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்தனர். சமீப காலமாக பாகிஸ்தானின் பொருளாதார நிலையும் மிகப்பெரும் சரிவை கண்டுள்ளது. இதனால் அந்நாட்டிற்கு கடன் வழங்கும் உலக நிதி அமைப்புகள் அரசின் செலவினங்களை கட்டுப்படுத்தும்படி நிர்ப்பந்தப்படுத்தி வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக தங்கள் நாட்டில் தஞ்சமடைந்துள்ள அகதிகளான ஆப்கானிஸ்தானியர்களை வெளியேற்றும் நடவடிக்கையில் பாகிஸ்தான் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. தங்கள் நாட்டிலிருந்து வெளியேற ஆப்கானியர்களுக்கு பாகிஸ்தான் விதித்திருந்த காலக்கெடு நவம்பர் முதல் நாளில் முடிவடைந்தது.

நீண்டகாலமாக வாழும் ஆப்கானிய அகதிகளை வெளியேற்றும் விடயத்தில் கூடுதல் அவகாசம் வழங்க வேண்டும் என பாகிஸ்தானிடம் தலிபான் கோரிக்கை விடுத்துள்ளது. அதேவேளை ஆப்கான்களை வெளியேற்றும் பாகிஸ்தான் முடிவிற்கு ஐநா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

**சட்டவிரோத 17 இலட்சம் ஆப்கானியர்கள்:**

எந்த ஆவணங்களும் இல்லாமல் பாகிஸ்தானில் தங்கியுள்ளவர்கள் முதற்கட்டமாக வெளியேற்றப்படுவார்கள் என்றும், அகதிகளுக்கான அட்டை வைத்துள்ளவர்கள் தங்க அனுமதிக்கப்படுவார்கள் எனவும் பாகிஸ்தான் அறிவித்துள்ளது. ஆனால், அகதி அட்டை வைத்துள்ளவர்களும் குறி வைக்கப்படுவதாக பல அகதிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

பாகிஸ்தானில் சட்டவிரோதமாக 17 இலட்சம் ஆப்கானியர்கள் தங்கியிருக்கும் நிலையில் பாகிஸ்தானில் தங்கியிருக்கும் ஆப்கானியர்கள் அனைவரும் நவம்பர் 1-ஆம் தேதிக்குள் நாட்டை விட்டு வெளியேற உத்தரவு இடப்பட்டது.

இல்லையெனில் கட்டாயமாக வெளியேற்றப்படுவார்கள் என பாகிஸ்தான் அரசு அறிவித்தது. கடந்த மாத தொடக்கத்தில் வெளியான இந்த அறிவிப்புக்கு பிறகு 1 இலட்சத்து 30 ஆயிரம் ஆப்கானியர்கள் பாகிஸ்தானை விட்டு வெளியேறியுள்ளனர்.



**பாகிஸ்தானின் பொருளாதாரத வீழ்ச்சி நிலையும், தொடரும் பயங்கரவாதத் தாக்குதல்களும் பெரும் பிரச்னையாக உள்ளன. மற்றொரு முக்கியமான காரணி என்னவென்றால், பாகிஸ்தான் தற்போது ஒரு இடைக்கால அரசாங்கத்தின் கீழ் உள்ளது. இந்த இடைக்கால அரசாங்கம், சரவதேச ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கிடையில், ஆப்கான் அகதிகளை நாடு கடத்தும் உத்தரவு பாகிஸ்தானில் பலத்த விமர்சனங்களை சந்தித்துள்ளது**

இந்நிலையில் பாகிஸ்தான் அரசின் கெடு முடிவுக்கு வருவதால் தடுப்புக் காவலில் வைக்கப்படலாம் அல்லது தாக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக ஆயிரக்கணக்கான ஆப்கானி யர்கள் எல்லைச்சாவடிகளில் அணிவகுத்து நிற்கின்றனர்.

இந்நிலையில் தலிபான் அரசு வெளியிட்ட அறிக்கையில், உள்நாட்டு போர் காலத்தில் லட்சக்கணக்கான ஆப்கானியர்களுக்கு அடைக்கலம் கொடுத்த பாகிஸ்தான் மற்றும் பிற நாடுகளுக்கு நன்றி. பாகிஸ்தானை விட்டு வெளியேற யாரையும் கட்டா யப்படுத்த கூடாது. ஆப்கானியர்களுக்கு கூடுதல் அவகாசம் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது.

**ஆப்கன்களை வெளியேற்றும் முடிவு?**

ஆப்கானிஸ்தான் பல தசாப்தங்களாக தங்கள் சொந்த நாட்டில் அடிக்கடி மோதல்களை எதிர்கொண்டுவருகிறது. இதனால், ஆப்கானிஸ்தானிகள் பலர் பாகிஸ்தானில் குடிபெயர்ந்து வந்தனர்.

பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் அகதிகள் அதிகளவில் உள்ளனர். இவர்களால் பாகிஸ்தான் குடிமக்கள் சிக்கல்களை சந்தித்து வருகின்றனர் எனக் கூறப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபை, உரிமைக் குழுக்கள் மற்றும் மேற்கத்திய தூதரகங்க ளின் முறையீடுகள் இருந்த போதிலும், அவர்களை நாடு கடத்துவதற்கான தனது முடிவில் தற்போது பாகிஸ்தான் தீவிரமாக உள்ளது.

தலிபான் ஆட்சியின் கீழ் வீழ்ச்சியடைந்த பொருளாதாரம், பேரழிவு தரும் பூகம்பங்கள், உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியவை பெரும்பாலான மக்கள் வெளியேற காரணம் ஆகும்.

மேலும், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு கல்வி அல்லது வேலை அனுமதிக்கப்படவில்லை.

புலம்பெயர்ந்தவர்களில் பலர் 1970களில் சோவியத் போரின் போது ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியே றினர். மேலும், ஆவணங்களை வழங்குவ தற்கான நீண்ட செயல்முறை காரணமாக பலரால் ஆவணங்களைப் பாதுகாக்க முடியவில்லை.

**ஆப்கானியர்கள் நடத்திய குண்டுவெடிப்பு தாக்குதல்கள்:**

பாகிஸ்தான் தனது சொந்த பொருளாதார விவகாரங்கள் மற்றும் பாதுகாப்பை கருத்தில் கொண்டு ஆப்கானியர்களை வெளியேற்றுகிறது என்று கூறுகிறது. முக்கியமாக, ஆப்கானிஸ்தான் குடியேறியவர்கள் பயங்கரவாத தாக்குதல்கள், தெருக் குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்ற குற்றங்களில் ஈடுபடுவதாக கூறப்படுகிறது.

இந்த ஆண்டு நடந்த 24 தற்கொலை குண்டுவெடிப்புகளில் 14 தாக்குதல்கள் ஆப்கானியர்கள் நடத்தியது ஆகும் என்று கூறப்படுகிறது.

**பாகிஸ்தான் பொருளாதார அவல நிலை**

பாகிஸ்தானின் பொருளாதாரத்தின் அவல நிலையும், தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தானின் பயங்கரவாதத் தாக்குதல்களும் பெரும் பிரச்னையாக உள்ளன. மற்றொரு முக்கியமான காரணி என்னவென்றால், பாகிஸ்தான் தற்போது ஒரு இடைக்கால அரசாங்கத்தின் கீழ் உள்ளது.

இதனால், இந்த இடைக்கால அரசாங்கம், வெளியேற்றங்களின் சாத்தியமான அரசியல் அல்லது தேர்தல் வீழ்ச்சியிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கிடையில், நாடு கடத்தும் உத்தரவு பாகிஸ்தானில் பலத்த விமர்சனங்களை சந்தித்துள்ளது.

**தலிபான் கொடூர ஆட்சி:**

தலிபான்கள் நாடு கடத்தப்படுவதை கடுமையாக விமர்சித்துள்ளனர். இருப்பினும் ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதால், அதன் மேல் குளிர காலம் நெருங்கி வருவதால், ஏற்கனவே மிகவும் பலவீனமான சூழ்நிலையில் உள்ள ஒரு நாட்டிற்கு மக்கள் திரும்பிச் செல்வதற்கு இது சிறந்த பருவம் அல்ல என்று அவதானிகள் தெரிவித்துள்ளார்.

**பாகிஸ்தான் முடிவிற்கு ஐநா எதிர்ப்பு:**

10 லட்சத்துக்கும் அதிகமான அகதிகள் நவம்பர் 1க்குள் வெளியேற வேண்டும் என்றும் இது அரசாங்கத்தின் எந்த ஒரு அழுத்தமும் இன்றி தன்னார்வத்துடன் அவர்களாக மேற்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது. பாகிஸ்தான் அரசின் இந்த உத்தரவிற்கு ஐநா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. மேலும் 40 ஆண்டுகளாக அகதிகளுக்கு பாதுகாப்பு அளித்து வந்த பாகிஸ்தான் அரசு, அகதிகளை வெளியேற்றாமல் இருக்க புதிய திட்டத்தை வகுக்க வேண்டும். பாதிக்கப்பட்டு அகதிகளாக தஞ்சம் புகுந்தவர்களிடம் போதுமான ஆவணங்கள் ஏதும் முறையாக இருக்க வாய்ப்பில்லை என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று தலிபான் அரசு கூறியுள்ளது.

மேலும் அகதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பாகிஸ்தான் எடுக்கும் முயற்சிகளுக்கு ஐநா அகதிகள் அமைப்பு ஆதரவு அளிக்க தயாராக உள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

செப்டம்பர் மாதம் கராச்சி நகரில் மட்டும் 700 ஆப்கானியர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். தவிர நாட்டின் பல நகரங்க ளில் பலநூறு பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

வெளியேற்றப்படும் ஆப்கானியர்களில் பெரும்பாலானோர் கூலிப்பணிகளில் ஈடுபட்டு வறுமையில் வாழ்ந்து வந்ததால், அவர்களிடம் சேமிப்புகளோ, வேறு பொருட்களோ இல்லாமல் கேள்விக்குறியாகும் எதிர்காலத்துடன் டிரக்குகளில் அடைக்கப்பட்டு ஆப்கானிஸ்தான் எல்லையில் கொண்டு விடப்படுகின்றனர். அவர்களின் கண்ணீர் கதைகள் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது

பெண்களுக்கு கடுமையான கோட்பாடுகளை வலியுறுத்தும் தலிபான் ஆட்சி நடைபெறுவதால் அங்கு செல்ல அஞ்சும் மக்கள், பாகிஸ்தானில் வசிக்க இயலாமல் செய்வதறியாது தவிக்கின்றனர்.

பாகிஸ்தான் தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என ஐநா கோரிக்கை வைத்தது. ஆனால், 40 ஆண்டு காலம் மனிதாபிமான அடிப்படையில் அகதிகளுக்கு இடம் கொடுத்து விட்டதாகவும், இனியும் அதை தொடர முடியாது எனவும் பாகிஸ்தான் திட்டவட்டமாக பதிலளித்து உள்ளது.





# ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவது...

கடந்த வருட நடுப்பகுதியில் பதவிக்கு வந்த பின்னர் இதுநாள் வரையில் தேர்தல்கள் தொடர்பில் அவர் கடைப்பிடித்த அணுகுமுறைகளே இதற்கு காரணம்.

பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலில் தனது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தனக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கை அதிகரிக்கும் என்று விக்கிரமசிங்க நம்பிக்கை வைத்திருந்தார்.

ஆனால் அரச வருவாயை பெருக்குவதற்கு அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளின் போதாமை குறித்து சர்வதேச நாணய நிதியம் அதிருப்தி தெரிவித்ததைத் தொடர்ந்து அடுத்தடுத்து மேற்கொள்ளப்படும் வரிகள் மற்றும் சேவைகள் கட்டணங்களின் அதிகரிப்புக்கள் வாழ்க்கைச் செலவை மேலும் கடுமையாக அதிகரிக்கச் செய்து மக்களை திணறடித்துக் கொண்டிருக்கின்றன.

அதனால் மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மீதான வெறுப்பு கடுமையாக அதிகரிக்கிறது. சிவில் சமூக நிறுவனம் ஒன்றினால் சில தினங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட 'தேசத்தின் மனநிலை' கருத்துக் கணிப்பு இதை தெளிவாக நிரூபிக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் தனக்கு வாய்ப்பான தருணத்துக்காக காத்திருக்கும் ஜனாதிபதி என்ன செய்வது என்று தடுமாறிக் கொண்டிருக்கிறார் என்றே தோன்றுகிறது.

தேர்தல்களில் வெற்றிபெற முடியாத சூழ்நிலை இருக்குமென்றால் அதற்கு மாற்றுவழி தேர்தல்களை நடத்தாமல் விடுவதோ அல்லது வாய்ப்பான சூழ்நிலை வரும்வரை தேர்தல்களைக் காலந்தாழ்த்திக் கொண்டு போவதோ அல்ல. அவ்வாறு செய்ய முயற்சிப்பது அதிகாரத்தில் இருப்பதற்கான நியாயப்பாடு தொடர்பில் ஏற்கெனவே சவாலை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் அரசாங்கத்துக்கு பல முனைகளிலும் மேலும் நெருக்கடிகளையே கொண்டுவரும் என்பது நிச்சயம். அவருக்கு உபாயங்கள் அருகிக்கொண்டுபோகின்றன.

**ராஜபக்ஷக்களுக்கு எதிரான தீர்ப்பு**

கடந்த வருடத்தைய பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ச சகோதரர்களும் அவர்களுக்கு நெருக்கமான உயர்மட்ட அதிகாரிகளுமே பொறுப்பு என்று கடந்த வாரம் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஆட்சிமுறையில் தவறிழைத்து மக்களின் நம்பிக்கைக்கு துரோகம் செய்த முன்னாள் ஜனாதிபதிகளை குற்றவாளிகளாகக் கண்டு நாட்டின் அதியுயர் நீதிமன்றம் ஒரு வருட காலத்திற்குள் வழங்கிய இரண்டாவது தீர்ப்பாகும்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு பத்துக்கோடி ரூபா இழப்பீட்டை வழங்குமாறு இவ்வருட முற்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பானவர்களை விசாரிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட இரு அடிப்படை உரிமைமீறல் மனுக்களை விசாரணை செய்த உயர்நீதிமன்றம் ராஜபக்சாக்களும் ஏனைய பிரதிவாதிகளும் தங்கள் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கையை மீறிச் செயற்பட்டதாகவும் சட்டத்தின் சமத்துவமான பாதுகாப்பைப் பெறுவதற்கு மக்களுக்கு இருக்கும் அடிப்படை உரிமையை மீறிவிட்டதாகவும் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதிகள் கோட்டாபய ராஜபக்ச, மகிந்த ராஜபக்ச, முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ச, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவாட் கப்ரால், பேராசிரியர் டபிள்யூ.டி. லக்ஷ்மன், திறைசேரியின் முன்னாள் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிக்கல மற்றும் ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர்கள் பி.பி. ஜெயசுந்தர, சமான் குமாரசிங்க ஆகியோரே குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். இவர்களுடன் நாணய சபையும் மக்களின் நம்பிக்கைக்கு துரோகமிழைத்ததாக தீர்ப்பில் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால், குண்டுத்தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டை வழங்குமாறு சிறிசேனவுக்கு உத்தரவிட்டதைப் போன்று இந்த வழக்கின் பிரதிவாதிகளை பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீட்டை வழங்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிடவில்லை. பதிலாக குற்றவாளிகளை நான்கு மனுதாரர்களுக்கும் வழக்கு செலவுத் தொகையாக தலா ஒன்றரை இலட்சம் ரூபாவை செலுத்துமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

மனுதாரர்கள் இழப்பீடு வழங்கப்படவேண்டும் என்று கேட்கவில்லை என்பதால் அதற்கு உத்தரவிடவில்லை என்று நீதிமன்றம் கூறியிருக்கிறது. பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க உத்தரவிடவேண்டும் என்று மனுதாரர்கள் கோரிக்கை விடுத்திருந்தால் நீதியரசர்கள் எத்தகைய தீர்ப்பை வழங்கியிருப்பார்கள் என்பது முக்கியமான ஒரு கேள்வி.

இந்தியா போன்ற நாடுகளில் அரசாங்கங்களின் தவறான போக்குகளை சுட்டிக்காட்டி தீர்ப்புக்களை பல சந்தர்ப்பங்களில் வழங்கிய நீதித்துறைச் செயலூக்கம் (Judicial Activism) இலங்கையிலும் இருந்திருந்தால் வித்தியாசமான தீர்ப்பை எதிர்பார்த்திருக்கமுடியும்.

சட்டத்தின் பிரகாரம் வழக்குகளை விசாரிப்பதற்கு அப்பால் நீதிபதிகள் பொது நலனை மனதிற்கொண்டு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் தங்களது நேர்மையான அபிப்பிராயத்தின் அடிப்படையில் தீர்ப்புக்களை வழங்குவதுண்டு. இந்தியாவில் இதற்கு பல உதாரணங்களைக் கூறமுடியும்.

நாட்டின் 2 கோடி 20 இலட்சம் மக்களும் அல்லவா இந்த நெருக்கடியினால் பாதிக்கப் பட்டிருந்தார்கள்?

பாராளுமன்றத்தில் பட்ஜெட் மீதான விவாதத்தில் கடந்த வியாழக்கிழமை உரையாற்றிய தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் சுமந்திரன் நாட்டின் முழு சனத்தொகைக்கும் இழப்பீட்டை வழங்குவதற்கு போதுமான பணம் ராஜபக்ச சகோதரர்களிடம் இருக்கிறது என்று கூறினார்.

மனுதாரர்கள் கோரவில்லை என்பதால் உயர்நீதிமன்றம் இழப்பீடு குறித்து பரிசீலிக்கவில்லை என்றாலும் அதற்கான உத்தரவை நீதியரசர்கள் வழங்கியிருக்கமுடியும் என்று கூறிய அவர் ராஜபக்சாக்கள் வெளிநாடுகளில் பதுக்கிவைத்திருக்கும் பணத்தை இந்த நோக்கத்துக்காக மீட்டுக் கொண்டுவரமுடியும் என்றும் குறிப்பிட்டார்.

பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட சகலரும் இழப்பீட்டைக் கோர முன்வரவேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச அழைப்பு விடுத்து அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சி பிரதம கொறடாவுமான லக்ஸ்மன் கிரியெல்ல இலங்கையின் ஒவ்வொரு குடிமகனும் ஒன்றரை இலட்சம் ரூபா இழப்பீடு கோரி உயர்நீதிமன்றத்தை நாடுவதற்கு உரித்துடையவர்கள் என்று சபையில் கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது.

அதேவேளை பொருளாதாரம் தவறாகக் கையாளப்பட்டமைக்கு தாங்கள் பொறுப்பு என்ற தீர்ப்பை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று மகிந்த ராஜபக்ச கூறியிருக்கிறார். கடந்த புதன்கிழமை கண்டி தலதா மாளிகைக்கு வழிபாட்டுக்கு சென்ற அவரிடம் ஊடகவியலாளர்கள் தீர்ப்பு குறித்து கேட்டபோது சந்தர்ப்பம் கிடைக்கும்போது பொருளாதார நெருக்கடிக்கான காரணங்களை விளக்கிக்கூறப் போவதாகப் பதிலளித்தார். எப்போதுஅந்த சந்தர்ப்பம் கிடைக்கும் என்பது அவருக்கே வெளிச்சம்.

கோட்டாபய ராஜபக்சவும் பசில் ராஜபக்சவும் உடனடியாக எந்த கருத்தையும் கூறியதாக செய்தி வந்ததாக இல்லை. ஆனால், ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் வாரிசான நாமல் ராஜபக்ச தங்களது சிறிலங்கா பொதுஜன பெரமுன நீதித்துறையை எப்போதும் மதித்து வந்திருக்கிறது என்றும் பொருளாதார நெருக்கடியை ஆராய்வதற்கு சிறந்த இடம் பாராளுமன்றமே என்றும் கூறினார். இந்த விடயத்தை ஒரு பாராளுமன்ற தெரிவுக்குழு ஆராயமுடியும். சாட்சியங்களை அழைத்து விரிவான விசாரணைகளை நடத்தக்கூடிய ஆற்றல் கொண்ட தெரிவுக்குழு ஒன்று ஏற்கெனவே இருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

நாடு வங்குரோத்து நிலையை அடைந்தமைக்கான காரணங்களை ஆராய்வதற்கு கடந்த ஜூலையில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன பாராளுமன்ற தெரிவுக்குழுவை ராஜபக்சாக்களின் பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவாசம் தலைமையில் நியமித்திருந்தார். ஆனால் இதுவரையில் ஒரேயொரு தடவை மாத்திரமே அந்த குழு கூடியது என்பதை நாமல் ராஜபக்ச அறியாதவர் அல்ல. அதில் பங்கேற்பதற்கு எதிரணி அரசியல் கட்சிகளின் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் மறுத்துவிட்டார்கள்.

பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்பானவர்களை அடையாளம் கண்டு உயர்நீதிமன்றம் தீர்ப்பொன்றை வழங்கியிருப்பதால் அந்த தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை நிறுத்தவேண்டும் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அநுரா குமார திசநாயக்க சபாநாயகரை வலியுறுத்திக் கேட்டிருப்பது குறிப்பிடத்தக்கது

இலங்கை முன்னென்றும் கண்டிராத பொருளாதார நெருக்கடி தொடர்பில் உயர்நீதிமன்றம் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை வழங்கியிருக்கும் பின்னணியில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது பாராளுமன்றத்தினதும் பொருத்தமான நிறுவனங்களினதும் பொறுப்பு என்று இலங்கை 'ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நாஷனல்' சுட்டிக்காட்டியிருக்கிறது. ஆனால், அரசாங்கமும் பாராளுமன்றமும் ஏற்கெனவே நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவின் செயற்பாடுகளின் முடிவில் சமர்ப்பிக்கப்படக்கூடிய அறிக்கையை குறித்து அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்ந்து யோசிக்கலாம் என்று சாக்குப்போக்கை கூறக்கூடிய சாத்தியமே இருக்கிறது.

**அரசியல் விளைவுகள்**

பொருளாதார முறைகேடுகள் தொடர்பில் ஏற்கெனவே தொடுக்கப்பட்ட பல்வேறு வழக்குகளில் இருந்து ராஜபக்சாக்கள் சட்ட நுட்ப நுணுக்க காரணங்களின் அடிப்படையில் தங்களை விடுவித்துக்கொண்டார்கள். ஆனால் இந்த வழக்கில் இத்தகைய ஒரு தீர்ப்பு வரும் என்று அவர்கள் எதிர்பார்த் திருக்கமாட்டார்கள்.

"அறகலய" மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு மிகவும் தாழ்ந்த நிலைக்கு சென்ற ராஜபக்சாக்களின் மக்கள் செல்வாக்கை இந்த தீர்ப்பு மேலும் பாதிக்கும் என்பதில் சந்தேக மில்லை. அவர்களுக்கு எதிரான அரசியல் சக்திகளுக்கு ஒரு வலுவான 'ஆயுதமாக' தீர்ப்பு கிடைத்திருக்கிறது. அடுத்துவரக்கூடிய எந்த தேர்தலிலும் ராஜபக்ஷக்களுக்கு எதிரான பிரசாரங்களில் தீர்ப்பு பிரதான பிரசாரக் கருவியாக இருக்கும்.

ஊடகங்களுக்கு பதில் அளிப்பதில் எதிர்நோக்கக் கூடிய அசௌகரியங்களை மனதிற்கொண்டு பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் கிரமமாக நடத்தப்பட்டுவந்த செய்தியாளர்கள் மகாநாடு இரு வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டதாக ஒரு தகவல்.

தற்போது ஜனாதிபதி விக்கிரமசிங்க இந்த தீர்ப்பின் பின்னரான நிலைவரத்தை தனக்கு அனுகூலமான முறையில் பயன்படுத்துவதற்கு கடைப்பிடிக்கக்கூடிய அணுகுமுறைகளை வரும் நாட்களில் காணக்கூடியதாக இருக்கும்.

# மீண்டும் கமரொன்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்று வெளிச்சமிட்டுக் காண்பிப்பதுதான் சரியானது. வீட்டிலிருந்து அதனைச் செய்யமுடியாது" என்று உறுதியான பதிலளித்தார் டேவிட் கமரொன். தான் யாழ்ப்பாணம் செல்லவேண்டும் என்பதனையும் இலங்கை அரசுக்கு அவர் தெரிவித்திருந்தார்.

யாழ்ப்பாணம் சென்று பொது நூலகத்தில் சில அரசியல் தலைவர்களைச் சந்தித்தவர், ஆறு பத்திரிகையாளர்கள் தலைவர்கள் இழந்த 'உதயன்' பத்திரிகை அலுவலகத்துக்கும், சுன்னாகத்தில் சபாபதிப்பிள்ளை அகதிகள் முகாமுக்கும் சென்று திரும்பிய பின்னர், கொழும்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்த மறுநாள் (நவம்பர் 16), மாநாட்டு மண்டபத்தில் அவர் நடாத்திய பத்திரிகையாளர் மாநாடு, மாநாட்டையே ஆட்டமுற வைத்தது.

"மார்ச் மாத முடிவில் விசாரணை ஒன்று முடியவில்லை என்றால், ஐ. நா. மனித உரிமைகள் சபையில் நான் எமது நிலைப்பாட்டைப் பயன்படுத்தி, ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் செயல்பட்டு முழுமையான, நம்பகமான, சுதந்திரமான சர்வதேச விசாரணை ஒன்றுக்கு அழைப்பு விடுப்பேன் என்பதை மிகத் தெளிவாக கூறிவைக்கிறேன்" என்று அறைந்து கூறி அவர் அங்கிருந்து சென்றபோது, திரண்டிருந்த உள்ளூர், வெளியூர் பத்திரிகையாளர்களிடையேயிருந்து கிளம்பிய ஒரு பிரபல கொழும்பு ஆங்கில தினசரி ஆசிரியரின் குரல், "Bloody Prime Minister" என்று ஆவேசத்துடன் ஒலித்தது.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் டேவிட் கமரொன் நல்லிணக்கத்துக்கும், தமிழர்களுக்கான அதிகார பரவலாக்கலுக்கும் அதிக அளவில் செயல்பட வற்புறுத்திய போது, யுத்தம் முடிந்து நான்கு ஆண்டுகளே ஆகிறது என்றும், நாடு எதிர்கொள்ளும் பிரச்னைகளை சமாளிக்க அதிக காலம் தேவைப்படுவதாகவும் தெரிவித்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, டேவிட் கமரொனின் பத்திரிகையாளர் மாநாட்டின் பின்னர், 'கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறிய வேண்டாம்' என்று தெரிவித்திருந்தார்.

ஐரிஷ் பிரச்னையை எண்ணத்தில்கொண்டு அவர் இதனைத் தெரிவித்திருந்தார். ஜே. ஆர். ஜயவர்த்தன காலத்தில் கொழும்பில் நடந்த பொதுநல நாடுகளின் அமைச்சர்கள் மட்ட மாநாட்டில், அவரும் இப்படி, பிரிட்டிஷ் பிரதிநிதிகளுக்கு தன்னுடைய தொடக்க உரையில் நேரடியாகவே கூறினார்.

ஆக, இலங்கையில் பிரதமர்கள் எதிர்க்கட்சித் தலைவர்களாவதும் பின்னர் பிரதமர்களாவதும்தான் வழக்காகவிருக்கையில், இப்போது ஜனாதிபதிகள் பிரதமராகிறார்கள். ஆனால், இது தமிழர்களுக்கானதல்ல.

# வரவு - செலவு...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

கவனம் முழுவதும் சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடனிலேயே மையங் கொண்டுள்ளது போல் தெரிகிறது. கடனைப் பெற்றுபடு கடனை மீளச் செலுத்துவதாலும் வேறு நடைமுறைச் செலவுகளைச் செய்வதன் மூலமும் நாட்டை மீட்டெடுக்க முடியாது.

எனவே ரணிலின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் அவர் கூறுவது போல அண்மிய எதிர்காலத்தில் நாட்டைமீட்டெடுப்பதற்குத் தேவையான உறுதியான அடித்தளங்களைப் போதியளவு கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகிறது. அதனால் எதிர்காலத்தில் மேலும் நெருக்கடிகள் தோன்றுவதற்கான வாய்ப்புகளையும் நிராகரிக்கவும் முடியாது. அதேவேளை இத்திட்டம் தொடர்பாக விமர்சனங்களை முன்வைக்கின்ற எதிர்க் கட்சிகள் இன்று ஆட்சியிலிருந்தாலும் தாம் நினைப்பதுபோல முன்னேற்றமான ஒரு வரவு செலவுத் திட்டத்தை தங்களால் வைக்க முடியாது என்பதும் அவர்களுக்குத் தெரியும். தலையிடிக்கு தலையணை மாற்றம் எவ்வாறு பயன்தராதோ அதேபோல இவ்வாறான மேலெழுந்தவாரியான திட்டங்களாலோ மாற்றங்களாலோ நாட்டை மீட்டெடுக்க முடியாது. முழுமையான அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றத்தினாலும் முன்னேற்றமான அரசியல் பண்பாட்டினாலும் மட்டுமே நாட்டைவிரைவில் மீட்டெடுக்க முடியும்.

## நாட்டை....

நான் மதிக்கின்றேன். 2019 இல் தெரிவு செய்யப்பட்ட கோட்டாபயவின் அரசாங்கம் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வரிகளைக் குறைப்பதாக உறுதியளித் திருந்தது. எமக்கு வழங்கப்பட்ட ஆணையின்படி செயற்பட்டு வரிகளை குறைப்பது எவ்வாறு பிழையானது?.

அரசாங்கத்தின் கொள்கை முடிவி னால் தான் அனைத்துலக நாணய நிதி யத்திற்கு செல்ல வேண்டியதாகிவிட் டது. அதற்காக அவர்களின் வேலைத் திட்டத்தில் நாம் இணைந்து கொள்ள வில்லை.

வட் உள்ளிட்ட வரி குறைப்புக்கு எதிராக நீதிமன்றம் சென்ற கல்விமான் கள் நிதித்துறையின் நிதிப் பரிந்துரை களின் பேரில் தற்போதைய அரசுக்கு எதிராக வீதிகளில் ஊர்வலம் நடத்தியது தான் இங்கு வேடிக்கை-என்றார். (அ)

## சட்டவிரோத....

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்றொழில் பரிசோதகர் திணைக்களத் திடம் ஒப்படைக்கவுள்ளதாக கடற் படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ)

## றொஷானை....

இது தொடர்பாக நேற்று சனிக் கிழமை வெளியான அந்த வார ஏட்டின் பிரதான செய்தியில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

எதிர்வரும் ஜனவரி மாதம் விளை யாட்டுத்துறை அமைச்சர் பதவியில் மாற்றம் ஏற்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது நடைபெற்று வரும் வரவு - செலவுத் திட்ட விவாதம் நிறைவடைந் ததையடுத்து, இந்த மாற்றத்தை நடைமு றைப்படுத்துவது தொடர்பான பூர் வாங்க கலந்துரையாடல்களை தொடர்புபட்ட அமைச்சுக்கள் முன்னெடுத்து வருவதாக தெரியவந் துள்ளது.

தற்போது விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பதவியை வகிக்கும் றொஷ ான் ரணசிங்கவிடம் இருந்து விளையாட் டுத்துறை அமைச்சு நீக்கப்பட்டு, அந்த இடத்துக்கு எஸ்.பி. திசாநாயக்க நியமிக்கப்படவேண்டும் என பல பிரே ரணைகள் அரசாங்கத்திடம் சமர்ப் பிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரி விக்கப்படுகின்றது.

ஆனால், நீர்ப்பாசனத்துறை அமைச் சர் பதவியில் மாற்றம் இருக்காது என் றும் தெரிவிக்கப்படுகின்றது. விளையாட்டுத்துறை அமைச்சர் பதவிக்கு புதிதாக முன்மொழியப்பட் டுள்ள எஸ்.பி. திசாநாயக்க முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சரும் ஆவார்.

தற்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் றொஷான் ரணசிங்க இலங்கை கிரிக்கெட் சபையில் இடம்பெற்று வரும் மோசடி மற்றும் ஊழலுக்கு எதிராக பிரதிநிதிகள் சபையில் முறைப் பாடு செய்து, அதன்படி ஆளும் கட்சி யும் எதிர்க்கட்சியும் இணைந்து கிரிக் கெட் சபைக்கு எதிராக தீர்மானம் நிறை வேற்றினர்.

அத்துடன், கிரிக்கெட் சபை கலைக் கப்பட்டு, இடைக்காலக் குழுவும் நியமிக்கப்பட்டது. ஆனால் நீதிமன்ற உத்தரவுப்படி ஆட்சிமன்றக் குழுவுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட் டது.

இதனால், இந்த சம்பவம் சட்ட நெருக்கடியாக மாறியது. இந்தச் சங்கிலித் தொடருடன் அமைச்சர் றொஷான் ரணசிங்கவுக்கும் ஜனாதிபதி செயலக அதிகாரிகளுக்கும் இடையில் மோதல் நிலை உருவானது. மேலும் நெருக்கடிகள் அதிகரித்து வருவதால் விளையாட்டுத்துறை அமைச்சர் பதவி யில் மாற்றம் செய்ய உள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது என்று அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (அ)

## வடக்கில்....

புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரை யாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள் ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரி விக்கையில்-

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம், மற்றும் முல் லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிக ளுக்கும் மிகக் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இந்த மழை கிடைக்கும் போது இடிமின்னல் நிகழ்வு இடம்பெறும் வாய்ப்புள்ளமையும் குறிப்பிடத்தக்கது- என்றார். (அ)

## செந்திலின்....

வெளியான அந்த வார ஏட்டின் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

பல மாகாண ஆளுநர்களை இடமாற் றம் செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ள தாக செய்தி கிடைத்துள்ளது. அதன் மூலம் அண்மையில் பதவி இழந்த முன்னாள் அமைச்சர் நசீர் அகமட்டுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் பதவி வழங்கப்படவுள் ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் பதவி வகிக்கும் செந்தில் தொண்டமான் ஊவா மாகாண ஆளுநரா கவும், தற்போதைய ஊவா மாகாண ஆளு நரான ஏ.ஜே.எம். முசம்மில் மேல்மாகாண ஆளுநர் பதவிக்கும் நியமிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, தற்போது மேல் மாகாண ஆளுநராக பதவி வகிக்கும் முன்னாள் வான்படைத் தளபதி ரொசான் குணதிலக் கவுக்கு தூதுவர் பதவி கிடைக்க வாய்ப்பு உள்ளதாக அறிய முடிகிறது.

இந்த நியமனங்கள் மற்றும் இடமாற் றங்கள் அனைத்தையும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத் தொடர்பில் தற்போது கலந்துரை யாடல்கள் இடம்பெற்று வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## உருக்குலைந்த....

குறித்த சடலத்தில் நீல நிற சேட்டும், நீலம் மற்றும் சாம்பல் நிற சாறமும் அணிந்தவாறு காணப்படுகிறது.

கடந்த 14ஆம் திகதி பொன்னாலை கிராம சேவகர் அலுவலகத்தை சேதப் படுத்தும் விதத்தில் மனநலம் பாதிக்கப் பட்ட ஒருவர் செயற்படுகின்றார் என ஊர் மக்கள் கிராம சேவகருக்கு தெரியப் படுத்தினர். இதன்போது கூட்டம் ஒன்றில் இருந்த கிராம சேவகர் பொலிஸ ாருக்கு இது குறித்து தெரியப்படுத்தி னார்.

அந்த நபரின் புகைப்படம் ஊர் மக்களால் கிராம சேவகருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த புகைப்படத்தில் இருக்கின்ற நபரின் உடைகளும் சடலத் தில் இருக்கின்ற உடைகளும் ஒத்துப் போகின்றன.

ஊடகவியலாளர் ஒருவர் குறித்த பகுதிக்கு சென்று சடலத்தை புகைப் படம் மற்றும் காணொளி எடுத்த வேளை, அவரை காணொளி மற்றும் புகைப்படம் எடுக்க வேண்டாம் என பொலிஸார் மிரட்டும் தொனியில் தடுத்தனர்.

குறித்த ஊடகவியலாளர் வட்டுக் கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடந்த 14ஆம் திகதி பொன் னாலை கிராம சேவகரின் அறிவித்தலின் பேரில் மனநலம் பாதிக்கப்பட்ட ஒரு வரை பொலிஸ் நிலையம் அழைத்து சென்றீர்களா? அவ்வாறு அழைத்துச் சென்றால் அவர் எங்கே? என வினவி னார். அதற்கு "அது தொடர்பாக எது வும் தெரியவில்லை" என குறித்த ஊடக வியலாளருக்கு பதில் வழங்கப்பட்டது. (அ)

# கழிவு நீரை ஊற்றிச் சென்ற பவுசர் பொதுமக்களால் மடக்கிப் பிடிப்பு

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்ப்பாணம் செம்மணி நாயன் மார்கட்டு பகுதியில் கழிவுநீரை ஊற்றி விட்டு செல்ல முயன்ற பவுசர் வண்டி யொன்று அப்பகுதி மக்களால் மடக்கி பிடிக்கப்பட்டு சுகாதார பரிசோதகர்க ளிடம் ஒப்படைக்கப்பட்டது.

திருநெல்வேலியில் உள்ள நட்சத்திர விடுதியொன்றின் கழிவு நீரை அகற்றும் பவுசர் வண்டியே இவ்வாறு பிடி பட்டது.

வழமையாக இவ்வாறு கழிவுகளை ஊற்றி விட்டு செல்லும் பவுசர் வண் டியை அவதானித்த அப்பகுதி மக்கள் நேற்றுமுன்தினம் காலை மறைந்திருந்து பவுசரில் வந்தவர்கள் கழிவு நீரை ஊற்றும் போது கையும் களவுமாக பிடித்து சுகாதார பரிசோதகரிடம் ஒப்ப டைத்தனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சி யாக இடம்பெறுவதால் அப்பகுதியில்



துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதார ரீதியில் பெரும் பிரச்னைகளை எதிர் கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதிகளை உயர்தரமாக காட்டி கொள்பவர்கள் பொதுமக்கள் வசிக்கும் பகுதியில் இவ்வாறு கழிவு நீரை கீழ்த்தர மாக நடந்து கொள்வதாக அப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டனர்.

# மாணவனை தாக்கிய ஆசிரியர் கைதாகி பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் உள்ள பாடசாலையில் மாணவனை தாக் கிய ஆசிரியரொருவர் கைது செய் யப்பட்டு நேற்றுமுன்தினம் நீதிமன்ற பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தரம் 9 இல் கல்வி கற்கும் மாண வரொருவர் பாடசாலைக்கு வராத நிலை யில் ஆசிரியரால் தாக்கப்பட்டுள்ளார்.

மாணவன் சிகிச்சைக்காக யாழ்ப்பா ணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஆசிரியர் பொலிஸார் கைது செய்யப்பட்டார்.

விசாரணைக்கு பின்னர் யாழ்ப் பாணம் நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட ஆசிரியர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## காங்கேசன்...

தலா 60 கிலோ பொதிகளுடன் பயணிக்க லாம்.

ஒருவழிப் பயணக்கட்டணமாக 4,250 இந்திய ரூபாவும் மற்றும் வரிகளும் அறவிடப் படும். அத்தோடு ஒருவழிப் பயணக்கட்ட ணமாக 17,000 இலங்கை ரூபா மற்றும் வரிகள் அறவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முற்பதிவுகளை தொலை பேசி செயலி மற்றும் இணையவழிகளில் மேற் கொள்ள வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது - என்றார். (அ)

## கோப்....

விசாரணை மேற்கொள்ளும்போது இது தொடர்பாக அவர் எவ்வித தகவல்களை யும் வெளிப்படுத்தவில்லை.

அதனால் கிரிக்கெட் நிறுவனத்துடன் நெருங்கிய தொடர்புவைத்துள்ள கோப் குழுவின் தலைவர், தொடர்ந்தும் கோப் குழுவின் தலைவராக இருக்க முடியுமா என்பது பிரச்னைக்குரிய விடயமாகும்.

கிரிக்கெட் சம்பந்தமான கோப் குழு வில் பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவின் மகன் கனிஷ்க பண்டார அமர்ந்துள் ளார். எந்த அடிப்படையில் அவர் கோப் குழுவில் அமர முடியும். அதற்கு அனு மதி வழங்கியது யார்? எதிர்க்கட்சித் தலைவருக்கு இல்லாத உரிமை கோப் குழுவின் தலைவரின் மகனுக்கு எவ்வாறு கிடைத்தது. அதனால் கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண்டாரவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருக்கும் தரவுகளுக்கு அமைய அவருக்கு தொடர்ந்தும் கோப் குழுவின் தலைவராக இருப்பதற்கு தார் மீக உரிமை இல்லை." என எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் குற்றச் சாட்டுகளை முன்வைத்திருந்தார்.

இவ்வாறான பின்புலத்தில் ரஞ்சித் பண்டாரவுக்கு எதிராக நம்பிக்கையில் லாப் பிரேரணையை கொண்டுவர எதிர்க்கட்சி முடிவு செய்துள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேர ணையை சபாநாயகரிடம் கையளிக்க எதிர்க்கட்சி முடிவுசெய்துள்ளது. (அ)

## இலங்கையின்....

சந்திபொன்று நேற்று முன்தினம் மாலைதீவில் இடம்பெற்றது.

இதன்போதே இந்தியாவின் புவி அறிவியல் அமைச்சர் கிரண் ரிஜிஜூ இவ்வாறு கூறியுள்ளார்.

மாலைதீவு ஜனாதிபதியாக தேர்ந் தெடுக்கப்பட்ட மொஹமட் முய்ஸூ வின் அழைப்பின் பேரில் அவரது பதவி யேற்பு நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார். இந்நிகழ்வில் இந்தியாவின் சார்பில் அமைச்சர் கிரண் ரிஜிஜூ கலந்து கொண்டார்.

நிகழ்வில் பின்னர் தனியார் விடுதி யொன்றில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கும் அமைச்சர் கிரண் ரிஜிஜூக் கும் இடையிலான சந்திப்பு இடம்பெற் றுள்ளது.

அண்டை நாட்டுக்கு முன்னுரிமை என்ற கொள்கையின் கீழ் இந்திய அர சாங்கம் இலங்கையின் விவகாரங்களில் அக்கறையுடன் செயல்படுவதாக இந்த சந்திப்பில் அமைச்சர் கிரண் ரிஜிஜூ, ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளது டன், இந்தியா - இலங்கை இருதரப்பு உறவுகளை வர்த்தக மற்றும் முதலீட்டு ரீதியில் வலுப்படுத்துவதற்கான நடவ டிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் கலந்துரையாடியதாக கிரண் ரிஜிஜூ தமது எக்ஸ் தளத்தில் கூறியுள்ளார்.

பிராந்தியத்தில் உள்ள அனைவருக் கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி என்பது இந்தியப் பெருங்கடல் பிராந்தி யத்தில் கடல்சார் ஒத்துழைப்புக்கான இந்தியாவின் கொள்கை அல்லது கோட்பாடாகும் எனவும் அவர் கூறி யுள்ளார்.

அந்நியச் செலாவணி கையிருப்பில் ஏற்பட்ட கடுமையான பற்றாக்குறை காரணமாக, 2022 இல் இலங்கை பாரிய நிதி நெருக்கடியால் பாதிக்கப்பட்டது.

இத்தருணத்தில் இந்தியா 4 பில்லி யன் அமெரிக்க டொலர்களை இலங் கைக்கு உதவியாக வழங்கியது. அதன் பின்னர் இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை மேற் கொண்டு இரண்டாங்கட்ட கடன் தவ ணையை பெறுவதற்கான நகர்வுகளில் ஈடுபட்டு வருகிறது. (அ)

ஈழநாடு
Eelanadu

# உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பால் ராஜபக்ஷர்கள் குற்றவாளிகளல்லர்!

## கூறுகிறார் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, நவ. 19

**உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை கொண்டு பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்ஷர்கள் பொறுப்புக் கூறவேண்டும் என்று குறிப்பிட முடியாது. நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை கொண்டே நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. வரையறுக்கப்பட்ட நிலைக்கு அப்பாற்பட்டு நீதிமன்றம் செல்லவில்லை. இதனால் தான் பொருளாதார பாதிப்பு தொடர்பில் ஆராய தெரிவுக்குழுவை கோருகிறோம் என ஆளும் தரப்பின் பிரதம கொறடாவும், அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின்போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதாரப் பாதிப்புக்கு யார் காரணம் என்று குறிப்பிட்டுக் கொண்டு எதிர்க்கட்சியினர் அரசியல் பிரசாரம் செய்கிறார்கள்.

உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை தவறாக சித்தரிக்கிறார்கள். சுதந்திரத்தின் பின்னரான காலப் பகுதியில் நாட்டில் இடம்பெற்ற பல சம்பவங்களை மறந்து விட்டு செயற்படுவது கவலைக்குரியது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை கொண்டு பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்ஷர்கள் பொறுப்புக் கூற வேண்டும் என்று குறிப்பிட முடியாது.

நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை கொண்டே நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. வரையறுக்கப்பட்ட நிலைக்கு அப்பாற்பட்டு நீதிமன்றம் செல்லவில்லை. இதனால் தான் பொருளாதார பாதிப்புக்கு தெரிவுக்குழுவை கோருகிறோம்.

பொருளாதார பாதிப்புக்கு யார் காரணம் என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது ஆகவே பொருளாதார பாதிப்பு தொடர்பில் ஆராயும் தெரிவுக்குழு பயனற்றது குழுவை நீக்குமாறு எதிர்க்கட்சிகள் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

பொருளாதார பாதிப்புக்கான காரணிகள் நீதிமன்றத்தில் முழுமையாக ஆராயப்பட்டதா என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தை எதிர்க்கட்சியினர் விமர்சிக்கிறார்கள்.

2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் பல முன் மொழிவுகள் அமுல்படுத்தப்படவில்லை என்று விமர்சிக்கிறார்கள். குற்றச்சாட்டுக்களை மாத்திரம் முன்வைப்பதை எதிர்க்கட்சியினர் அடிப்படை கொள்கையாக கொண்டுள்ளார்கள்.

பொருளாதார பாதிப்புக்கு 69 இலட்ச மக்களாணையுடன் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தீர்வு காணவில்லை என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை.

பாரிய நெருக்கடிக்கு மத்தியில் அரசாங்கத்தை பொறுப்பேற்கு மாறு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய எதிர்க்கட்சித் தலைவரிடம் வலிறுத்தினார். ஆனால் அவர் அரசாங்கத்தை பொறுப்பேற்காமல் சோதிடம் பார்த்துக் கொண்டிருந்தார்.

நாட்டுக்காகவே நாங்கள் மாறுபட்ட அரசியல் கொள்கையுடைய ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம். நாடு தற்போது இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. நாட்டுக்காகவே ஒன்றிணைந்து செயற்படுகிறோம் என்பதை மக்கள் விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

பொருளாதார பாதிப்புக்கும் தமக்கும் எவ்வித தொடர்புமில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு மக்கள் விடுதலை முன்னணியினர் கருத்து தெரிவிக்கிறார்கள்.

சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த சகல அரசாங்கங்களுடனும் தொடர்புக் கொண்டுள்ளார்கள் பொருளாதார பாதிப்பை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள போலியான போராட்டத்தை தோற்றுவித்தார்கள். போராட்டத்தின் ஊடாக பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண முடியாது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது-என்றார். (அ)

## சுகாதார அமைச்சுக்கு புதிய செயலர்

கொழும்பு, நவ. 19

சுகாதார அமைச்சின் செயலாளராக விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால நியமிக்கப்பட்டுள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக்க சந்திரகுப்த ஓய்வுபெறவுள்ள நிலையில், இந்த புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால , சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக சில காலம் செயற்பட்டிருந்தார். பின்னர் உலக சுகாதார ஸ்தாபனத்தின் உயர் பதவிக ளிலும் அவர் செயற்பட்டிருந்தார்.

இந்த நிலையில், சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால நாளை திங்கட்கிழமை தமது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார். (அ)

## மரண அறிவித்தல்



### திருமதி வைஷ்ணவி இளங்கோ

யாழ்ப்பாணம், அல்வாய், வட்டுவத்தையை பிறப்பிடமாகவும், கொழும்பை வாழ்விடமாகவும், ஐக்கிய இராச்சியம் Birmingham இல் வசித்தவருமான திருமதி வைஷ்ணவி இளங்கோ கடந்த (26.10.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆனந்தகுமார் (Bond Master) மற்றும் குகாம்பிகை தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், இளங்கோவின் அன்பு மனைவியும், வைதேகி (Oman), புருஷோத் (UK) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் ஈவா தம்பதிகளின் மருமகளும், சிவகணேசன் - சந்திராதேவி (Sri Lanka) , சிவசங்கரன்-ஜெயராணி (Sri Lanka), சிதம்பரநாதன் - அமிர்தகௌரி (Sri Lanka ), சுப்ரமணியம், குணநேசன், குணநேசம், விமலா, குணரதனி ஆகியோரின் மரு மகளும், முத்துமயில்வாகனம் - அம்பிகை (Germany) , தனபாலசிங்கம் - ராதாம்பிகை (Canada), ஸ்ரீநந்தலோஜன்-நவாம் பிகை (Denmark), ஸ்ரீஜெயராமச்சந்திரன் (Canada), நகுலானந்தன் - ஞானாம்பிகை (UK) ஆகியோரின் பெறாமகளும், சிவராகுலன், ராகவி,ரமணீதரன், கேசினி, ஐங்கரன், சிவகணேசன், கோபாலராஜன், அஜந், ஆஷா, நிரோஷன், விவித்தா, சசிகரன், தேவசுவோஜினி ஆகியோரின் மைத்துனியும், மகிந்தன், அபிராமி, ரிஷபி, ரிஷிகர், ஷ்வாபி, பிரதிக்கா, மதுஷன், நிருஷன், விஷ்ணுபிரியா, வேல்முருகா, பிரபா-ரன்ஜன், வினித்தா-டோமினிக், ஜனேஷ், கமலன்-சாரு, அனுசிகா, பிரணவன், ஆகியோரின் சகோதரியும், அமீஷா, அமாயா, சாய்னா ஆகியோரின் மாமியும், கோபிஷா,யாதவ், ஆருஷ், அனுஸ்ரீ ஆகியோரின் சித்தியும், ரோஷேய்ன் துருவனின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-11-2023 ஞாயிற் றுகிழமை காலை 9.00 - 11.00 மணியளவில் லண்டனில் உள்ள Hendon Cemetery & Crematorium, Holders (Hill Rd, London NW7 1NB) நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

தகவல்:
**சிவகணேசன் (மாமன்)**
**+94768046362**

தொடர்புகளுக்கு:
**இளங்கோ (கணவன்) - +447399604792**
**புருஷோத் (சகோதரன்)- +447960641315**

# சீன சிறப்புத் தூதுவர் கொழும்பு வந்தார்

கொழும்பு, நவ. 19

சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்கின் சிறப்புத தூதுவர் ஷென் ஹிகின் உள்ளிட்ட தூதுக்குழுவினர் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று மாலை இலங்கைக்கு வருகை தந்தனர் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட சீன ஜனாதிபதி சீ ஜின்பிங்கின் சிறப்பு தூதுவர் ஷென் ஹிகின் உள்ளிட்ட தூதுக் குழுவினர் நேற்று சனிக்கிழமை இலங்கைக்கு வந்தது.

எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நாட்டில் தங்கியிருக்கும் சிறப்பு தூதுவர் ஷென் ஹிகின் உள்ளிட்ட குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர்மட்டத்தினரை சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.

இதேவேளை கொழும்பு துறைமுக நகர் திட்டம், அம்பாந்தோட்டையில் உத்தேசிக்கப்பட்டுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் உட்பட பல்வேறு சீன முதலீட்டு திட்டங்கள் தொடர்பில் அரச தரப்பினருடன் கலந்துரையாடவுள்ளதுடன், கண்டி தலதா மாளிகை உள்ளிட்ட பல இடங்களுக்கும் விஜயம் செய்ய திட்டமிட்டுள்ளார். (அ)

# வவுனியா சாந்தசோலை சந்தி விபத்து; பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழப்பு!

வவுனியா, நவ. 19

வவுனியா ஏ-9 வீதி சாந்தசோலை சந்தியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் ஓமந்தைப் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார்.

இதன்போது எதிரே மற்றொரு மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த முதியவர் ஒருவர் சாந்தசோலைப் பகுதிக்குள் திரும்ப முற்பட்டபோது குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த இருவரும் உடனடியாக மீட்கப்பட்டு வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும், குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழந்ததுடன், முதியவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்திய சாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

27 வயதான அக்கராயன் பகுதியில் பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவில் பணிபுரியும் திசாநாயக்கா என்பவரே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# மத்திய வங்கி ஆளுநர்கள் சபையிலிருந்து ஜனாதிபதியின் செயலாளர் விலகினார்!

கொழும்பு. நவ. 19

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்கள் சபை உறுப்பினர் பதவியில் இருந்து ஜனாதிபதியின் செயலாளர் சஞ்சீவ ஜயவர்த்தன பதவி விலகினார் என கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

சஞ்சீவ பதவி விலகியதற்கான காரணம் இதுவரை வெளியிடப்படவில்லை. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் உறுப்பினராகவும் அவர் பணியாற்றினார்.

முன்னைய நாணய சபை உறுப்பினர்களில், புதிய ஆட்சிக் குழுவுக்கு நியமிக்கப்பட்ட ஒரே உறுப்பினர் இவர்தான் என்று கொழும்பு செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# உணவுப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகும் புவி வெப்ப உயர்வு

**சிதம்பரம் இரவிச்சந்திரன்**

தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் வெப்ப அலைத் தாக்குதல்கள் இயற்கை உயிரினங்களுக்கு உணவு தரும் திறனை அச்சுறுத்தலிற்கு உள்ளாக்கியுள்ளது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். வெப்ப அலை ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியாவில் இந்தியா உட்பட பல பகுதிகளையும் தொடர்ச்சியாக பாதித்து வருகிறது. அதிகபட்ச வெப்ப நிலை ஒவ்வொரு நாளும் முதல் நாளை விட சாதனையளவாக உயர்கிறது.

நம் உணவுமுறை உலகளாவியது. உலகின் பல பகுதிகளிலும் ஒரே நேரத்தில் பல முக்கிய உணவுப் பயிர்களின் விளைச்சலில் இதனால் பாதிப்பு ஏற்படும். இது உணவுப் பற்றாக்குறைக்கும் அதன் மூலம் உணவுப் பொருட்களின் விலையேற்றத்திற்கும் வழிவகுக்கும். இது இப்போது உடனடியாக நிகழவில்லை என்றாலும் வரும் ஒரு சில பத்தாண்டுகளில் நிகழும் என்று லீட்ஸ் பல்கலைக்கழக வளி மண்டல அறிவியல் துறை பேராசிரியர் ஜான் மார்ஷம் (**Prof John Marsham**) கூறுகிறார்.

வசதி இருந்தால் கொளுத்தும் வெய்யிலில் இருந்து தப்ப வீட்டுக்குள் போய் நீங்கள் ஏசியைப் போட்டுக் கொள்ளலாம். ஆனால் இயற்கையான மற்றும் விவசாயம் சார்ந்த சூழல் மண்டலங்கள் இவ்வாறு செய்ய முடியுமா? ஐரோப்பாவில்



2018ல் ஏற்பட்ட வெப்ப அலைத் தாக்குதல் மத்திய மற்றும் வட ஐரோப்பாவில் பல பயிர்களைப் பாதித்தது. 50 வீத பயிரிழப்பை ஏற்படுத்தியது.

2022ல் ஏற்பட்ட உயர் வெப்பம் இங்கிலாந்தில் விளைந்த எல்லா வகை காய், பழங்களையும் அழித்தது. முந்தைய பதிவுகளுடன் ஒப்பிடும்போது 2040ல் வெப்ப அலைத் தாக்குதல்கள் இப்போது உள்ளதை விட 12 மடங்கு அதிகமாக அடிக்கடி ஏற்படும். ஒரே ஒரு வெப்ப அலைத் தாக்குதல் ஒரு சூழல் மண்டலத்தையே அழித்துவிடாது.

ஆனால் நீண்ட காலம் நீடிக்கும், அடிக்கடி நிகழும் வெப்ப அலைகளை சரிசெய்ய இயற்கைக்குப் போதுமான அவகாசம் கிடைக்காது.

நாம் இயல்பாக வாழ உதவும் வானிலை பற்றி பொதுவாக மக்கள் கவலைப்படுவதில்லை. நமக்கு வேண்டியதை வாங்க நாம் கடைக்குச் செல்கிறோம். நமக்குத் தேவையான உணவை நாமே உற்பத்தி செய்வதில்லை. ஆனால் உலகில் எந்தப் பகுதியில் இருக்கும் எந்த ஒரு விவசாயிடம் நீங்கள் பேசினாலும் வானிலையும் காலநிலை மாற்றமும் அவர்களின் விவசாயத்திற்கு ஏற்படுத்தும் நன்மை, தீமைகள் பற்றி அவர்கள் விழிப்புணர்வு பெற்றவர்களாக உள்ளனர்.

காலநிலை மாற்றம் வளி மண்டல வெப்பநிலையை மட்டும் அதிகரிப்பதில்லை. கடல் வெப்பநிலையையும் அதிகரிக்கிறது. இது கடலோர சூழலைப் பாதிக்கிறது. மனித குலத்தின் மற்றொரு முக்கிய உணவு மூலத்தையும் அழிக்கிறது. மிக உயர் வெப்பநிலை உயிரினங்களை ஒட்டுமொத்தமாகக் கொல்கிறது. எடுத்துக்காட்டு ஒரு பில்லியன் கடல்வாழ் விலங்குகள் உயிரிழக்கக் காரணமாக இருந்த 2021 கனடிய பசுபிக் வெப்ப அலைத் தாக்குதல் நிகழ்வு மற்றும் ஈராக் அஷ்மான் நதியில் வெப்ப அலைத் தாக்குதலால் ஜூலை 2023ல் பெருமளவில் இறந்து கரையொதுங்கிய மீன் கூட்டம்.

சுலபமாகப் பார்க்க முடிகிறது என்பதால் நாம் நிலப்பகுதியில் நிகழும் மாற்றங்களையே காண்கிறோம். வெப்பம் அதிகரித்தால் தாவரங்கள் சூடாகின்றன, விலங்குகளும் பாதிக்கப்படுகின்றன. கடலில் ஏற்படும் வெப்ப அலைகள் பற்றி யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை. இதனால் கடல்வாழ் உயிரினங்கள் ஒட்டுமொத்தமாக அழிவது ஒருவகையில் நிசப்த மரணங்கள் என்று பிரிஸ்ட்டல் பல்கலைக்கழக புவி அறிவியல் பேராசிரியர் டானியல்லா ஸ்மிட் கூறுகிறார்.

வெப்ப மண்டலம் போன்றவை ஒரு காலத்தில் ஆண்டு முழுவதும் நிலையான வெப்பநிலை நிலவும் கடல் சூழல் பகுதிகளாக இருந்தன. 2 டிகிரி செல்சியஸ் வெப்ப உயர்வு உலகில் இருக்கும் எல்லா பவளப் பாறைகளையும் அழித்துவிடும் என்று அஞ்சப்படுகிறது. உலகில் உள்ள மற்ற எல்லா சூழல் மண்டலங்களையும் விட இப்பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் அரியவகை உயிரினங்கள் வாழ்கின்றன.

இப்பகுதிகள் பெரும்பாலும் ஏழை நாடுகளைச் சேர்ந்த ஐநூறு மில்லியனுக்கும் அதிகமான மக்களின் வாழ்வாதாரமாக உள்ளது. நாம் உடனடியாக செயல்படாவிட்டால் இவை பூமியில் இருந்தே மறையும் அபாயம் உள்ளது என்று மார்ஷம் கூறுகிறார்.



### தாவரங்கள் தரும் ஆக்சிஜனைதான் நாம் சுவாசிக்கிறோம்!

ஆள்பவர்களுக்கு பவளப்பாறைகள் அழிவது பற்றி கவலையில்லை. ஆனால் எந்த ஒரு சூழல் மண்டலமும் இவை இல்லாமல் அதிக நாட்கள் நீடித்து நிலைத்திருக்க முடியாது. இன்றுள்ள நிலையில் உலகின் எந்த ஒரு பகுதியும் காலநிலை மாற்றத்தால் நிகழ்ந்து வரும் பாதிப்புகளில் இருந்து தப்பமுடியாது.

உலகில் எல்லாவற்றிற்கும் பணரீதியான மதிப்பு இல்லை. உள்ளிழுக்கும் ஒவ்வொரு மூச்சுக்காற்றுக்கும் தாவரங்கள் அவசியம். அவை தரும் ஆக்சிஜனையே நாம் சுவாசிக்கிறோம்! இதை நாம் மறந்துவிடுகிறோம்.

நிலப்பகுதி வெப்பம் சூழல் மண்டலங்களைப் பாதிக்கிறது என்பது பற்றிய ஆய்வுகள் இப்போதே தொடங்கியுள்ளன. 4.4 டிகிரி செல்சியஸ் வெப்ப உயர்வில் பூமியில் இன்று வாழும் 41 வீத நில வாழ் முதுகெலும்பிகள் 2099ல் அதி வெப்ப நிகழ்வுகளால் பாதிக்கப்படும் என்று சமீபத்தில் நேச்சர் ஆய்விதழில் வெளிவந்த ஆய்வு எச்சரிக்கிறது. வெப்ப உயர்வு உயிரினங்களின் வளர்ச்சி, இனப்பெருக்கத் திறன், நோய் எதிர்ப்பாற்றல் மற்றும் நடத்தை போன்ற பலவற்றில் அச்சமூட்டும் பாதிப்புகளை ஏற்படுத்தும்.

### குளிர்ச்சியான இடங்களை தேடிச் செல்லும் உயிரினங்கள்

இந்த நிலை தொடர்ந்தால் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் 40 வீதமான முதுகெலும்புள்ள உயிரினங்கள் அழிந்துவிடும். சகிக்க முடியாத வெப்பத்தில் இருந்து தப்ப உயிரினங்கள் மலைப்பகுதிகளுக்கும் துருவப் பகுதிகளுக்கும் இடம் பெயர்கின்றன. இதன் விளைவாக பல உயிரினங்கள் முற்றிலும் அழியும் அபாயம் ஏற்படும். வெப்பமான பூமியில் இயற்கை மெல்ல மெல்ல நிலப்பகுதிகளையும், ஏரி குளம் போன்ற நீர்நிலைகளையும் அந்த சூழ்நிலைக்கேற்ப தகவமைக்கும் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

நகரப்பகுதி வெப்ப உயர்வு 2 டிகிரி செல்சியஸ் அளவிற்குக் குறையக் காரணமாக இருந்த கொலம்பியாவில் மெடலின் பகுதியில் உள்ள பசுமை பெருவழிப் பாதை போன்ற திட்டங்கள் மூலம் வெப்பம் மிகுந்த வருங்கால உலகில் நிலம், நீர்நிலைகள், மரங்கள் போன்றவை பூமியைக் குளிரச் செய்ய உதவும் என்று "பூமியின் வருங்காலக் குளிர்ச்சியடையும் போக்கு" பற்றி ஆராயும் ஆக்ஸ்போர்டு மார்ட்டின் திட்ட மூத்த ஆய்வாளர் பேராசிரியர் நிக்கோல் மிராண்டா கூறுகிறார்.

பசுமைப் போர்வை போர்த்தப்பட்ட நிலப்பரப்பும் இயல்பான சூடுடைய கடலும் இருந்தால் மட்டுமே நாளை மனிதன் என்ற உயிரினமும் பூமியில் வாழ முடியும் என்று ஆய்வாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

●